530

18 FEB 1951
MADRAS

எங்கள் தமிழ் வாசகம்

நான்காம் புத்தகம்

N. நஞ்சப்பா B.A., B.O.L., L.T.

விந்திய வெளியீடுகள்

அண 8

TB
O-,6(4)
N50
145930

எங்கள் தமிழ் வாசகம்

நான்காம் புத்தகம்

ஆசிரியர் :

N. நஞ்சப்பா, B.A., B.O.L., L.T.

போர்டு உயர்நிலைப்பள்ளி,

காவேரிப்பட்டணம், சேலம் மாவட்டம்.

விந்தியா பப்ளிகேஷன்ஸ்

வேப்பேரி : : சென்னை–6

காபிரைட்] 1950 [விலை அணா 8

முதற் பதிப்பு—1950

600 008.
145930

TB
O-,6(4)
N50

Kabeer Printing Works, Madras-5

முன்னுரை

எங்கள் தமிழ் வாசகம் என்னும் பெயர் கொண்ட இவ்வாசக வரிசை, அரசியலார் 1939 - இல் வெளியிட்ட பாட இயலைத் தழுவி எழுதப்பட்டது.

இந் **நான்காம் புத்தகத்தில்** இக்காலத்திற்கேற்ற பல வகைப்பட்ட பாடங்கள் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு பாடத்தின் ஈற்றிலும் (1) அரும்பதவுரை, (2) கேள்விகள், (3) பயிற்சி என்னும் மூன்றும் போதுமான அளவில் தரப்பட்டுள்ளன. பாரதியார், நாமக்கல் கவிஞர், கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை என்னும் இக்காலக் கவிஞருடைய எளிய பாக்கள் ஆங்காங்குச் சேர்க்கப்பட்டுள்ளன. செய்யுட் பாடத்திற்கு அரும்பதவுரை தரப்பட்டுள்ளது. பெரும்பாலான பாடங்களுக்கு விளக்கமான படங்கள் தரப்பட்டுள்ளன. பிள்ளைகளுடைய அறிவைப் பண்படுத்தும் பயிற்சிகள் அறிஞர் கவனிக்கத் தக்கவையாகும்.

இவ்வாசக வரிசை பிள்ளைகளுக்குத் தமிழ் மொழி அறிவை ஊட்டித் தாய் மொழியில் பற்றுக் கொள்ளச் செய்யும் என்று நம்புகிறேன். தமிழன்னை அருள் புரிக.

ஆசிரியன்

பொருளடக்கம்

எண்	பொருள்		பக்கம்
1.	காவிரியாறு	...	1
2.	எங்கள் தோட்ட வேலை	...	5
3.	நகராட்சி மன்றம்	...	8
4.	மருத்துவ நிலையம்	...	11
5.	செந்தமிழ் நாடு (பாட்டு)	...	14
6.	சர்க்கரை	...	16
7.	பாய் நெசவு	...	19
8.	உடற் பயிற்சி விளையாட்டுகள்	...	22
9.	போலீஸ் சேவகர்	...	25
10.	ஊருக்கு நல்லது (பாட்டு)	...	28
11.	கப்பல்	...	30
12.	கிராம சுகாதாரம்	...	34
13.	நூலகமும் படிப்பகமும்	...	38
14.	காக்கையும் முத்து மாலையும் (கதைப்படம்)	...	42
15.	ஒற்றுமை (பாட்டு)	...	44
16.	குறிப்புப் புத்தகம்	...	46
17.	இயேசு நாதர் (மௌன வாசிப்பு)	...	49
18.	கடிதங்கள்	...	53
19.	மாணவர் இல்லம்	...	57
20.	கைத்தொழில் (பாட்டு)	...	61
21.	நான் கண்ட நல்லிடம்	...	63
22.	பெரியோர் உரைநடை	...	67
23.	வீரத்தாய் (மௌன வாசிப்பு)	...	70
24.	படப்பயிற்சி	...	74
25.	ஆறு (பாட்டு)	...	75
26.	பொதுநலத் தொண்டர் (மௌன வாசிப்பு)	...	77
27.	சென்னை உயிர்க் காட்சிச்சாலை	...	82
28.	பத்திரிகைச் செய்திகள்	...	86
29.	நண்பர் இருவரும் கரடியும் (நாடகம்)	...	90
30.	செய்யுட் பாடம்	...	
	(1) மூதுரை	...	93
	(2) நல்வழி	...	95
	(3) குமரேச சதகம் ...	...	97
	(4) பிள்ளையை இழந்த தாய் ...	...	98
	(5) பிள்ளை ஒழுக்கம் ...	...	99

எங்கள் தமிழ் வாசகம்

நான்காம் புத்தகம்



1. காவிரியாறு

1. தமிழ் நாட்டில் வளம் மிகுந்த பகுதிகள் பல உண்டு. அவற்றுள் சிறந்தது **சோழ நாடு**. சோழ நாடு நெற்களஞ்சியம் என்னும் பெயர் பெற்றது. அதற்குக் காரணம் காவிரியாறு அங்குப் பாய்வதே ஆகும். இது சோழ நாட்டில் நெல் விளைவுக்கேற்ற வண்டலையும் தண்ணீரையும் உதவுகிறது. இதனால்தான் நம் முன்னோர்கள், "சோழநாடு சோறுடைத்து" என்று சோழ நாட்டைப் பாராட்டிச் சொன்னார்கள்.

2. காவிரியாறு மைசூர்க்கு மேற்கே உள்ள குடகு நாட்டில் உற்பத்தியாகிறது. அங்கு இதற்குத் **தலைக் காவேரி** என்பது பெயர். அங்கு மழை மிகுதியாகப்

பெய்கின்றது. ஆகவே காவிரியில் தண்ணீர் குறைவ தில்லை. காவிரி குடகில் தோன்றி மைசூர் நாட்டு வழியே பாய்கிறது. அங்கு இதன் உதவியால் பயிர்த் தொழில் நன்கு நடைபெறுகிறது. **கண்ணம்பாடி** என்னும் இடத்தில் காவிரியில் **அணை** கட்டப்பட் டுள்ளது. காவிரி மைசூரைத் தாண்டிக் கோயம்புத்தூர் வழியாகப் பாய்ந்து திருச்சிராப்பள்ளியை அடை கின்றது. இடையில், **பவானி**, **நொய்யில்** என்ற சிற்றாறுகள் காவிரியில் கலக்கின்றன. கோயம்புத்தூர், சேலம் ஜில்லாக்களின் எல்லையில் உள்ள மேட்டூரில் காவிரியாற்றில் **புதிய அணை** கட்டப்பட்டுள்ளது. அது **மேட்டூர் அணை** எனப்படும். அதனில் காவிரியின் நீர் தேக்கப்பட்டு, பல கால்வாய்கள் வழியாக விடப்படு கிறது. அந்த நீர் ஆயிரக்கணக்கான ஏக்கர் பரப்புள்ள தரிசு நிலங்களை விளை நிலங்களாக மாற்றிவருகிறது.

3. திருச்சிராப்பள்ளிக்குச் சிறிது மேற்கில் காவிரியின் குறுக்கே '**பெரிய அணை**' என்னும் ஓர் அணை கட்டப்பட்டுள்ளது. அங்கிருந்து **கொள்ளிடம்** என்னும் ஆறு பிரிந்தோடுகிறது. திருச்சிராப்பள்ளிக் குச் சிறிது கிழக்கில் **கல்லணை** என்னும் ஓர் அணை உள்ளது. அங்குக் காவிரி இரண்டு பிரிவுகளாய்ப் பிரிந்து தஞ்சாவூரில் பாய்கின்றது; நிலங்களுக்கு வேண்டும் நீரையும் வண்டலையும் கொண்டுபோய்ச் சேர்க்கின்றது.

4. காவிரியாற்றின் நீளம் நானூற்றைம்பது மைல். இது கடலில் சேருமுன் இதன் குறுக்கே **கீழணை** என்ற ஓர் அணை கட்டப்பட்டுள்ளது. இங் ஙனம் இந்த ஆற்றின் ஆரம்பத்திலிருந்து முடிவுவரை பல அணைகள் கட்டப்பட்டுள்ளன. இந்த ஆற்றி

லிருந்து பிரிந்தோடும் கிளை ஆறுகளும் பல ஆகும். இவை சோழ நாட்டில் கணக்கற்ற ஏக்கர் நிலங்களைச் சாகுபடி செய்கின்றன. இவ்வாறு இந்த ஆற்றின் நீர் வீணாய்ப் போகாது, பயிர்த் தொழிலுக்குப் பயன் படுகிறது. இதனாலேயே சோழநாட்டைப் பொன் விளையும் நாடென்றும், காவிரியைப் **பொன்னி** என்றும் கூறுவதுண்டு.

5. காவிரியாறு ஸ்ரீரங்கம் என்னும் இடத்தில் அதிக உயரத்திலிருந்து செங்குத்தாக விழுகின்றது. இந் நீர்வீழ்ச்சி **சிவ்சமுத்திர நீர்வீழ்ச்சி** எனப்படும். இங்கு அரசாங்கத்தினர் சில இயந்திரங்களை அமைத்து, மின்சார சக்தியை உண்டாக்குகின்றனர். இங்ஙனமே மேட்டூரிலும் மின்சார சக்தி உண்டாக்கப்படுகிறது. அச்சக்தியால் சேலம் முதலிய பல நகரங்களுக்கு மின்சார வசதி கிடைத்துள்ளது.

கேள்விகள்

1. நெற்களஞ்சியம் எனப் பெயர் பெற்றது எது?
2. தலைக்காவேரி என்பது என்ன?
3. கண்ணம்பாடி அணை ஏன் கட்டப்பட்டது?
4. காவிரியின் நீளம் என்ன?
5. கீழணை எங்குக் கட்டப்பட்டுள்ளது?
6. நீர்வீழ்ச்சியினால் உண்டாகும் பயன் என்ன?
7. ஸ்ரீரங்கத்தில் உள்ள நீர்வீழ்ச்சியின் பெயர் யாது?

பயிற்சி

1. 'ஆறும் அதன் பயனும்' என்பதுபற்றி ஒரு கட்டுரை எழுது.

2. 'நீர்வீழ்ச்சியின் பயன்' என்பதுபற்றி ஒரு கட்டுரை வரை.

3. கோடிட்ட இடங்களை நிரப்பு :—

(1) சோழநாடு —— என்னும் பெயர் பெற்றது.

(2) கண்ணம்பாடி என்னும் இடத்தில்——கட்டப்பட்டுள்ளது.

(3) இங்கிருந்து —— என்னும் நதி பிரிந்தோடுகிறது.

(4) —— பொன்னி என்றும் கூறுவதுண்டு.

4. நீ ஒரு நீர்வீழ்ச்சியைக் காண விரும்புவதாக உன் தந்தைக்கு ஒரு கடிதம் எழுது.

5. ஆ—**பசு, பால், கடுகு, பட்டம்**—இப்படி ஓர் எழுத்தோ, இரண்டு முதலிய எழுத்துக்களோ தொடர்ந்துவந்து ஒருபொருளைத் தெரிவிப்பது **சொல்** எனப்படும்.

(1) வா, போ, கை—ஒரு எழுத்துச் சொற்கள்.

(2) பல், பால், நில்—இரண்டு எழுத்துச் சொற்கள்.

(3) பணம், படம், பள்ளி—மூன்று எழுத்துச் சொற்கள்.

(4) கட்டம், சட்டம், தங்கம்—நான்கு எழுத்துச் சொற்கள்.

6. இப்பாடத்தில் வந்துள்ள இந்த நால்வகைச் சொற்களுக்கும் இரண்டு இரண்டு உதாரணங்கள் கொடு.

7. செங்குத்தாக, கணக்கற்ற, வீணுய், சாகுபடி, களஞ்சியம், பாராட்டி.—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துச் சொல்.

8. மிகுந்த, அங்கு, பாராட்டி, புதிய, வேண்டும், ஆரம்பம்.—இவற்றிற்கு எதிர்ச் சொற்களைக் கூறு.

9. உனக்குத் தெரிந்த ஆறுகளின் பெயர்களைச் சொல்; பிறகு எழுது.

10. பயிர்த்தொழிலைப் பற்றி நீ அறிந்துள்ள விவரங்களைப் பத்து வரிகளில் எழுது.

11. நீ நன்ருய் அறிந்துள்ள ஓர் ஆற்றைப் பற்றிப் பத்துவரிகள் எழுது.

2. எங்கள் தோட்டவேலை

1. எங்கள் ஊர் திங்களூர். எங்கள் ஊரில் ஒரு பள்ளிக்கூடம் இருக்கின்றது. அதில் எட்டு வகுப்புகள் இருக்கின்றன. எட்டு வகுப்புகளிலும் இரு நூற்றைம்பது பிள்ளைகள் படிக்கிறார்கள். அவர்களில் நூற்றைம்பது பேர் ஆண் பிள்ளைகள்; நூறு பேர் பெண் பிள்ளைகள். எங்கள் பள்ளிக்கூடம் ஒரு பெரிய மைதானத்தில் கட்டப்பட்டு இருக்கிறது. அதற்கு எதிர்ப் புறத்தில் ஒரு பெரிய தோட்டம் இருக்கிறது. அது எங்கள் **பள்ளித் தோட்டம்**. அதில் நாள்தோறும் நாங்கள் எங்கள் ஆசிரியர்களுடன் வேலை செய்கிறோம். ஒவ்வொரு நாளும் ஒரு வகுப்பு மாணவர்கள் தோட்டவேலை செய்யவேண்டும். அவ்வாறு நான்காம் வகுப்பு மாணவர் முதல் எட்டாம் வகுப்பு மாணவர்வரை தோட்டவேலை செய்கிறோம்.

2. முதலில் நாங்கள் நிலத்தை நன்றாகக் கொத்தித் தோட்டத்தின் ஒரு பக்கத்தில் வாழைக்கன்றுகளை நட்டோம்; மற்றொரு பக்கத்தில் கத்திரி, வெண்டை

முதலிய காய்கறிச் செடிகளைப் பயிராக்கினோம்; வேறொரு பக்கம் புடலை, பீர்க்கு, அவரை முதலிய கொடி வகைகளைப் பயிராக்கினோம். தோட்டத்தின் மற்றொரு பகுதியில் நிலத்தைக் கொத்தினோம்; பல பாத்திகளை அமைத்தோம்; அவற்றில் கீரை விதைகளை விதைத்தோம்; மற்றொரு பக்கம் ரோஜா, மல்லிகை, சாமந்தி முதலிய பூச்செடிகளை வைத்துப் பயிராக்கினோம்.

3. எங்களுக்குமுன் படித்த மாணவர்கள் மாமரங்களையும், தென்னை மரங்களையும் வைத்துப் பயிராக்கினர். அவை நன்றாக வளர்ந்து பலனைத் தருகின்றன. நாங்கள் (ஆண்களும் பெண்களும்) மகிழ்ச்சியோடு தோட்ட வேலை செய்கின்றோம்; கிணற்றிலிருந்து நீர் இறைக்கின்றோம்; அந்நீர் செடிகளுக்கும் கொடிகளுக்கும் பாத்திகளுக்கும் செல்லும்படி நீர்க்கால்கள் அமைக்கின்றோம்; நீர் அவை அனைத்திற்கும் பாயும்படி செய்கின்றோம்; பாத்திகளில் முளைக்கும் புல் பூண்டுகளை எடுத்து எறிகின்றோம்.

4. எங்கள் உழைப்பின் பலனை வாழைக்காய், கத்திரிக்காய், வெண்டைக்காய், புடலங்காய் முதலிய காய் வகைகளிலும், அரைக்கீரை, முளைக்கீரை, மணித்தக்காளிக் கீரை முதலிய கீரை வகைகளிலும், ரோஜாப்பூ, மல்லிகைப்பூ, சாமந்திப்பூ முதலிய மலர் வகைகளிலும் கண்டு மகிழ்கின்றோம். நாங்கள் தோட்ட வேலையை விருப்பத்துடன் செய்கிறோம் என்பதை மீண்டும் கூற விரும்புகிறோம். அவ்வேலை எங்களுக்கு ஒரு வகை உடற்பயிற்சியாகவும் அமைகின்றது. இத்தோட்டவேலைப் பயிற்சி, பள்ளித் தோட்டத்துடன் நின்றுவிடவில்லை. நாங்கள் எங்கள் வீட்டுத் தோட்டத்திலும் காய்கறிகளைப் பயிர்செய்யத் தொடங்கி இருக்கிறோம். உங்கள் பள்ளியில் இத்தகைய தோட்ட

முண்டா? நீங்கள் அதனில் எங்களைப்போல் வேலை செய்கின்றீர்களா?

அருஞ்பதவுரை

விருப்பம் - மகிழ்ச்சி. உழைப்பு - முயற்சி.

கேள்விகள்

1. பள்ளித் தோட்டம் எங்கு அமைந்திருக்கிறது?
2. அதில் மா, பலா, தென்னை மரங்கள் யாரால் பயிர் செய்யப் பட்டன?
3. பிள்ளைகள் அத் தோட்டத்தில் பயிரிடும் செடிகள் எவை?
4. அத் தோட்டத்தில் பயிராகும் கொடிகள் எவை?
5. அங்கு மலரும் பூக்கள் எவை?
6. யார் யார் தோட்டவேலையைச் செய்கிறார்கள்?
7. இத் தோட்டவேலையால் பிள்ளைகள் அடைந்த நன்மை என்ன?

பயிற்சி

1. தோட்டவேலை, வீட்டுவேலை—இரண்டையும் பற்றிப் பத்துப் பத்து வரிகள் எழுது.

2. உனக்குத் தோட்டவேலை தெரியுமா? உன் வீட்டுத் தோட்டத்தில் அல்லது பள்ளித் தோட்டத்தில் என்னென்ன பயிரா கின்றன? அவற்றின் பெயர்களைச் சொல்.

3. தோட்டவேலை செய்தல் உடற்பயிற்சி செய்தலுக்கு ஒப் பாகும் என்பது எப்படிப் பொருந்தும்?

4. பாத்தி, செடிவகை, நீர் பாய்ச்சுதல், பலன்—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துச் சொல்.

5. முதல் பாடத்தில் சொல்லைப் பற்றிப் படித்தாய் அல்லவா? இங்குச் சொல்தொடர் என்பது இன்னது என்பதை அறிந்துகொள்.

கண்ணன் படிக்கிறான்.—இதில் இரண்டு சொற்கள் இருக் கின்றன. முதற் சொல்லுடன் இரண்டாம் சொல் தொடருகிறது. இவ்வாறு சொற்கள் தொடர்ந்து வருவது சொல்தொடர் (சொற் றொடர்) எனப்படும்.

(1) கண்ணகி படித்தாள்—இரண்டு சொற்களாலான தொடர்.

(2) கண்ணகி பாடம் படித்தாள்—மூன்று சொற்களாலான தொடர்.

(3) கண்ணகி பாடத்தை நன்கு படித்தாள்—நான்கு சொற்க ளாலான தொடர்.

6. இப்பாடத்திலிருந்து மேலே காட்டிய மூன்று வகைச் சொற் றொடர்களுக்கும் மும்மூன்று உதாரணங்கள் கொடு.



3. நகராட்சி மன்றம்

1. நகரத்தில் சாலைகள் அமைத்தல், விளக்குகள் போடுதல், தண்ணீர் வசதி ஏற்படுத்துதல் முதலிய வேலைகளைக் கவனிக்கும் கழகம் **நகராட்சி மன்றம்** அல்லது **நகரசபை** எனப்படும். நகர மக்கள் மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை அம்மன்றத்து உறுப்பினரைத் தேர்ந்தெடுப்பார்கள். அவ்வுறுப்பினர்கள் தமக்குள் ஒருவரைத் தலைவராகவும் மற்றொருவரைத் துணைத் தலைவராகவும் தேர்ந்தெடுத்துக்கொள்ளுவார்கள்.

2. அம்மன்றத்தில் இருக்கும் உறுப்பினர் தொகை என்ன? ஒவ்வொரு நகரமும் சில பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கும். ஒவ்வொரு பிரிவிலும் ஓர் உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்படுவார். சில நகரங்களில் முப்பது உறுப்பினர் இருப்பர்; சிலவற்றில் முப்பத்தைந்து பேர் இருப்பர்; சென்னை போன்ற பெரிய நகரங்களில் ஐம்பது அல்லது அறுபது பேருக்குமேலும் இருப்பர். ஆதலால் ஒரு நகர சபையில் இருப்பவர்

தொகை 'இவ்வளவு' என்று பொதுவாகச் சொல்ல முடியாது.

3. இவ்வுறுப்பினர் கவனிக்கும் விஷயங்கள் எவை? நகரத்தில் சாலைகள் அமைத்தல், அவற்றைப் பழுதுபார்த்தல், சாலைகளில் விளக்குப் போடுதல், குடிநீர் வசதி அளித்தல், மருத்துவ நிலையம் வைத்து நடத்தல், பள்ளிக்கூடங்கள் வைத்து நடத்தல், வாசக சாலைகளைத் திறந்து நடத்தல், நூல்நிலையங்களை வைத்து நடத்தல் போன்ற பல விஷயங்களை இவ்வுறுப் பினர்கள் கவனிக்கின்றனர்.

4. இவற்றைக் கவனிக்க இவர்களுக்குப் பணம் ஏது? மன்றம் வீட்டுவரி, தொழில் வரி, அனுமதி (லைசன்ஸ்) கட்டணம், கல்வி வரி ஆகிய பலவகை வரி களை நகர மக்களிடமிருந்து வசூலிக்கிறது; அத் தொகையிலிருந்தே மேலே சொன்ன பல விஷயங் களைக் கவனிக்கிறது.

5. உறுப்பினர் தீர்மானிக்கும் விஷயங்களைச் செயலில் செய்பவர் மன்றத்து **ஆணையாளர்** (கமிஷனர்) என்பவர்.

6. நகர மக்கள் ஒத்துழைப்பால்தான் நகராட்சி மன்றம் ஒழுங்காக வேலை செய்ய முடியும். அவர்கள் நல்ல ஒழுக்கமும் கல்வியும், தங்கள் நகரப் பகுதியின் முன்னேற்றத்தில் கருத்தும் உடைய அறிஞரையே தேர்ந்தெடுத்து அனுப்புதல் வேண்டும்; அத்துடன் வீட்டையும் தெருக்களையும் சுத்தமாக வைத்துக் கொள்ளவேண்டும். உரிய காலத்தில் வரிகளைத் தவறாது செலுத்தவேண்டும். இவ்வாறு நகரமக்கள் மன்றத்தாருடன் ஒத்துழைத்தால், மன்றச் செயல்கள் குறைபாடில்லாமல் நடைபெறும்; நகரத்தில் மேலும் பல நன்மைகளைச் செய்துகொள்ளலாம்.

அருஞ்பதவுரை

உறுப்பினர் - அங்கத்தினர். தொகை - எண்ணிக்கை. செயல்- வேலை. கருத்துடன் - ஊக்கத்துடன். பிரிவு - பகுதி.

கேள்விகள்

1. நகராட்சி மன்றம் என்பது யாது ?
2. கழக உறுப்பினர் எவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுகின்றனர் ?
3. அவர்கள் கவனிக்கும் நகர சம்பந்தமான வேலைகள் யாவை ?
4. கழகத்திற்கு வேண்டும் பணம் எவ்வாறு கிடைக்கிறது ?
5. கழக அலுவல்களைக் கவனிப்பவர்கள் யாவர் ?
6. நகரமக்கள் கடமை என்ன ?

பயிற்சி

1. நகராட்சி மன்றத்தின் தொண்டுகள் என்பதுபற்றி நீ அறிந்த கருத்துகளைத் தொகுத்து வரை.

2. நீ எந்த நகராண்மைக் கழகக் கட்டடத்தையேனும் பார்த்திருக்கின்றாயா ? அதைப்பற்றிச் சில வாக்கியங்கள் எழுது.

3. நகராண்மைக் கழக வளர்ச்சிக்கு நாம் என்ன செய்ய வேண்டும் என்பதைச் சொல்.

4. உறுப்பினர், துணைத்தலைவர், ஆணையாளர், நன்மை— இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துச் சொல்.

5. (1) கற்பகம் பாடம் **படித்தாள்**

(2) கற்பகம் பாடம் படித்து

(3) பாடம் படித்த கற்பகம்—இவற்றுள் ஒவ்வொன்றும் மூன்று சொற்களாலான சொற்றொடர். ஒவ்வொன்றும் கருத்து முடிந்து நிற்கின்றதா ? கவனித்துப்பார். இவற்றில் எது கருத்து முடிந்த சொற்றொடர் ? கற்பகம் பாடம் **படித்தாள்** என்பதே கருத்து முடிந்து நிற்கும் சொற்றொடர். மற்றவை இரண்டும் கருத்து முடியாமல் இருப்பவை. கருத்து முடிந்து நிற்கும் சொற்றொடர் **முற்றுச் சொற்றொடர்** அல்லது **வாக்கியம்** எனப்படும். கருத்து முடியாதது **எச்சச் சொற்றொடர்** எனப்படும்.

6. கீழ்வரும் வாக்கியங்களில் உள்ள முற்றுச் சொற்றொடர்களையும் எச்சச் சொற்றொடர்களையும் எழுது :—

(1) கண்ணன் கடைக்குப் போய்

(2) போன கண்ணன் பந்து வாங்கி

(3) அண்ணன் பந்து வாங்கினான்

(4) குரங்கு மரத்தில் தாவி

(5) பூனை எலியைப் பிடித்தது



4. மருத்துவ நிலையம்

1. படத்தில் காணப்படுவது ஒரு **மருத்துவ நிலையம்**. அது ஊர் மக்களுடைய நோய்களை அறிந்து மருந்து கொடுத்துக் குணப்படுத்தும் நிலையம். அதில் நோய்களைக் கண்டறிய **மருத்துவர்** இருக்கிறார். அவர் குறிக்கும் மருந்துகளைத் தயாரித்துக் கொடுக்க வேறொருவர் இருக்கிறார். அவருக்குக் **கம்பவுண்டர்** என்பது பெயர். பெரிய நோய்களால் தாக்கப்பட்ட மக்கள் மருத்துவ நிலையத்திலே சிறிது காலம் தங்கி மருந்தை உட்கொள்வார்கள். அப்பொழுது அடிக்கடி அவர்களைக் கவனிக்கச் சிலர் இருப்பர். அவர்களுக்குத் **தாதிமார்** என்பது பெயர்.

2. படத்தை நன்கு கவனியுங்கள். இதில் மூன்று பகுதிகள் இருக்கின்றன. முதற் பகுதியில் இரண்டு நோயாளிகள் பெஞ்சில் அமர்ந்திருக்கின்றனர். ஒரு சிறுவனை மருத்துவர் பரிசோதிக்கிறார். அவன் தன் தொண்டையில் சதை வளர்ந்திருப்பதாக மருத்துவரிடம் தெரிவிக்கின்றான். மருத்துவர் வாயைத் திறக்கச்

சொல்லிச் சோதிக்கின்ருர். உட்கார்ந்திருக்கும் இருவருள் ஒருவருக்குத் தலையில் காயம் ஏற்பட்டுள்ளது. அதனை ஆற்றிக் கொள்ள அவர் மருத்துவ நிலையம் வந்து போகிருர். இன்னொருவருக்குக் காலில் கட்டுக் கட்டப்பட்டுள்ளது. அவரும் தம் காலின் காயம் குணம் அடைய மருத்துவ நிலையம் வந்து போகிருர்.

3. நோயாளிகளை முதலில் மருத்துவர் சோதிப்பார்; அவரவர் உடல் நிலைக்கு ஏற்றவாறு மருந்தினை எழுதித் தருவார். நோயாளி அதனைப் பெறக் கம்பவுண்டரிடம் செல்லுவார். அவர் மருத்துவர் குறித்த மருந்தினை ஓர் அம்மையாருக்குத் தருவதை இரண்டாம் பகுதியில் பாருங்கள்.

4. மூன்ரும் பகுதியில் நோயாளிகள் படுத்துக் கொண்டிருக்கின்றனர். அவர்களுக்கு மருத்துவத் தாதிமாருள் ஒருவர் மருந்து கொடுக்கிருர். அவர் மருத்துவர் சொல்லும் மருந்தினைக் காலம் அறிந்து நோயாளிகளுக்குத் தருவார்; அவ்வப்போது அவர்களின் உடல் நிலையைக் குறித்துச் சுவரில் தொங்கும் அட்டையில் குறித்துவைப்பார். மருத்துவர் அவ்வட்டைகளைக் கண்டு, நோயாளிகளின் உடல் நிலையைத் தெரிந்துகொள்வார்; உடல்நிலைக்கு ஏற்ருற்போல் மருந்துகள் மாற்றித் தருவார்.

5. மூன்ரும் பகுதிக்குப் பின்புறத்தில் காயங்களைக் கட்டும் இடம் இருக்கிறது. காதுவலி, வெட்டுக் காயங்கள், புண்கள், கட்டிகள் இவற்றுக்கு மருந்து போடும் இடம் அதுவே. அங்கு இந்த வேலையைக் கவனிக்க ஒருவர் இருக்கிருர்.

அரும்பதவுரை

மருத்துவ நிலையம் - ஆஸ்பத்திரி. மருத்துவர் - டாக்டர். தாதி - நர்ஸ்.

கேள்விகள்

1. கம்பவுண்டர் என்பவர் யார்? அவர் வேலை என்ன?
2. மருத்துவரின் வேலை என்ன?
3. தாதிமார் என்பவர் யாவர்?
4. மருத்துவர் சிறுவனை ஏன் வாயைத் திறக்கச் சொல்லுகிறார்?
5. தாதிமார்களின் பணி யாது?

பயிற்சி

1. மருத்துவ நிலையத்தின் அவசியம் குறித்துச் சில வரிகள் எழுது.

2. நீ எந்த மருத்துவ நிலையத்தையேனும் கண்டதுண்டா? அதைப்பற்றிச் சில வரிகள் எழுது.

3. மருத்துவ நிலையம், நோயாளி, மருந்து, கம்பவுண்டர்—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது.

4. அறை—கட்டடத்தின் ஒரு பகுதி
அரை—ஒன்றில் பாதி—(எண்) } வேறுபாட்டைக் கவனி.

5. இப்பாடத்தில் முதலாம் எண் குறிக்கப்பட்டுள்ள பகுதியில் எத்தனை வாக்கியங்கள் இருக்கின்றன? ஏழு வாக்கியங்கள் இருக்கின்றன. இவை "மருத்துவ நிலையப் பகுதிகள்" என்னும் ஒரே பொருள் பற்றி ஒன்றை ஒன்று தொடர்ந்து வந்திருக்கின்றன. இப்படி ஒரே பொருள் பற்றிச் சில அல்லது பல வாக்கியங்கள் தொடர்ந்துவரும் பகுதிக்குப் **பத்தி** அல்லது **பாரா** என்பது பெயர்.

6. இப்பாடத்தில் எத்தனைப் பத்திகள் வந்திருக்கின்றன?

7. ஒவ்வொரு பகுதியும் என்ன பொருள் பற்றி வந்திருக்கிறது? படித்துப் பதில் சொல்.

5. செந்தமிழ் நாடு

(பாட்டு)

செந்தமிழ் நாடெனும் போதினிலே—இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே—எங்கள்
தந்தையர் நாடென்ற பேச்சினிலே—ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே. (1)

காவிரி தென்பெண்ணை பாலாறு— தமிழ்
கண்டதோர் வையை பொருனை நதி—யென
மேவிய ஆறு பலஓடத்—திரு
மேனி செழித்த தமிழ்நாடு. (2)

கல்வி சிறந்த தமிழ்நாடு—புகழ்க்
கம்பன் பிறந்த தமிழ்நாடு—நல்ல
பல்வித மாயின சாத்திரத் தின்மணம்
பாரெங்கும் வீசும் தமிழ்நாடு. (3)

வள்ளுவன் தன்னை உலகினுக் கேதந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு—நெஞ்சை
அள்ளும் சிலப்பதி காரமென் றோர்மணி
ஆரம் படைத்த தமிழ்நாடு. (4)

—பாரதியார்

அரும்பதவுரை

மேவிய - பொருந்திய. திருமேனி - அழகிய உடல். வையை - வைகை ஆறு. பொருனை - தாமிரவருணி ஆறு. கம்பர் - இவர் இராமாயண நூலின் ஆசிரியர். மணம் - வாசனை. பார் - பூமி.

கேள்விகள்

1. இன்பத் தேன் காதில் பாய்வது எப்போது ?
2. மூச்சினில் சக்தி பிறப்பது எப்போது ?
3. தமிழ் நாட்டில் பாயும் ஆறுகள் யாவை ?
4. தமிழ் நாடு எவ்வாறு சிறப்புடையது ?

பயிற்சி

1. 'திருமேனி செழித்த தமிழ்நாடு' என்று ஆசிரியர் கூறுவது எவ்வாறு பொருந்தும்?

2. 'செந்தமிழ் நாடு' என்பது பற்றிப் பத்து வரிகள் எழுது.

3. கம்பன் பெருமையைக் குறித்து நீ அறிந்தனவற்றை எழுது.

4. 'தமிழ் நாட்டின் ஆறுகளும் அதன் பயன்களும்' என்பது பற்றி ஒரு சிறு கட்டுரை வரை.

5. வரதன் வந்தான். —இந்த வாக்கியத்தில் **வரதன்** என்பது ஒரு மனிதனைக் குறிக்கும் **பெயர்**. **வந்தான்** என்பது அவன் செய்த வினையை (தொழிலை)க் குறிக்கும் சொல். இப்படி, ஒரு பொருளின் பெயரைக் குறிக்கும் சொல் **பெயர்ச்சொல்** எனப்படும். அப் பொருள் செய்யும் வினையைக் குறிக்கும் சொல் **வினைச்சொல்** எனப்படும்.

6. நான்காம் பாடத்து இரண்டாம் பாராவில் வந்துள்ள பெயர்ச்சொற்களையும் வினைச்சொற்களையும் கீழ்க் காணும் கட்டத்தில் எழுது :

எண்	பெயர்ச்சொல்	வினைச்சொல்
1		
2		
3		
4		
5		
6		



6. சர்க்கரை

(தந்தைக்கும் மகளுக்கும் உரையாடல்)

தகப்பனுர் :—கமலா, அறைக்குள்ளே என்ன சாப்பிட்டுக்கொண்டிருந்தாய்?

கமலம் :—நான் லட்டு சாப்பிட்டுக்கொண்டிருந்தேன். அப்பா, லட்டு இனிப்பதற்கு அதில் சேர்க்கப்பட்டுள்ள சர்க்கரை காரணம் என்று தாயார் கூறினுர். அச் சர்க்கரை எதனுல் செய்யப்படுகிறது?

தகப்பனுர் :—சர்க்கரை கரும்பைக் கொண்டு செய்யப்படுகிறது.

கமலம் :—அப்பா, கரும்பு எவ்வாறு பயிராகிறது?

தகப்பனுர் :—கரும்பை ஒவ்வொரு துண்டிலும் கணு இருக்கும்படி துண்டு துண்டாக வெட்ட வேண்டும்; நன்ருக உழுத நிலத்தில் அத் துண்டுகளைச் சிறிது சாய்த்து நடவேண்டும். சில நாட்களுக்குப் பிறகு ஒவ்வொரு துண்டிலுமுள்ள கணுவிலிருந்து

முளை தோன்றும். அதிலிருந்து கரும்பு வளர்ச்சி அடையும்.

கமலம் :—அக் கரும்பிலிருந்து சர்க்கரை எவ்வாறு செய்யப்படுகிறது ?

தகப்பனர் :—கரும்பைப் பயிர் செய்பவர், நன்ருய் முற்றிய கரும்புகளை வெட்டிக் கட்டுக் கட்டாகக் கட்டுவர் ; அவற்றைக் **கரும்பு ஆலை** உள்ள இடத்துக்கு எடுத்துச் செல்வர் ; அங்குக் கட்டை அவிழ்த்து ஒவ்வொரு கழியாக ஆலையிற் கொடுப்பர். அப்பொழுது கருப்பஞ்சாறு ஒரு பக்கமும், கருப்பஞ் சக்கை மற்ருெரு பக்கமும் வெளிவரும். அங்குள்ள வேலையாட்கள் கருப்பஞ்சாற்றைப் பெரிய கொப்பரை யில் ஊற்றிக் காய்ச்சுவார்கள். அவ்வாறு காய்ச்சினல் சாறு குழம்பாக மாறும். அந்த நிலையில் சாற்றில் சிறிதளவு சுண்ணும்பு நீரைக் கலப்பார்கள். அதனல் குழம்பில் உள்ள அழுக்கு முழுவதும் நுரையாக மாறி மேலே வரும். அவர்கள் அந்த அழுக்கை எடுத்து விடு வார்கள் ; பிறகு குழம்புபோல் இருக்கும் பாகை ஆழம் அதிகமில்லாத தொட்டிகளில் ஊற்றி ஆறவைப்பார்கள் ; பாகு சிறிது இறுகியவுடன் அதனைக் கட்டையால் தேய்ப்பார்கள். அதனல் பாகு சர்க்கரையாக மாறும். அதுவே **பழுப்புச் சர்க்கரை** எனப்படும்.

கமலம் :—அப்பா, வெள்ளைச் சர்க்கரை எவ்வாறு செய்யப்படுகிறது ?

தகப்பனர் :—கமலா, பழுப்புச் சர்க்கரையை நீரில் வடிகட்ட வேண்டும் ; பிறகு அதனுடன் சில மருந்து வகைகளைச் சேர்த்துக் காய்ச்சவேண்டும். அப்பொழுது அது வெள்ளை நிறமுடைய சர்க்கரை யாக மாறும்.

கமலம் :—நான் சாப்பிட்ட லட்டு எந்தச் சர்க்கரையைக் கொண்டு செய்யப்பட்டது ?

தகப்பனார் :—மிட்டாய், லட்டு போன்றவை வெள்ளைச் சர்க்கரையால் செய்யப்படும். பழுப்புச் சர்க்கரை, மாவிளக்கு, பணியாரம் முதலிய தின் பண்டங்கள் செய்யப் பயன்படும்.

கேள்விகள்

1. கரும்பு எவ்விதம் பயிர் செய்யப்படுகிறது ?
2. சாறு எது ? குழம்பு எது ?
3. சாற்றிலுள்ள அழுக்கு எவ்வாறு போக்கப்படுகிறது ?
4. பாகு என்பது எது ?
5. பழுப்புச் சர்க்கரை எப்படி செய்யப்படுகிறது ?
6. வெள்ளைச் சர்க்கரை எவ்வாறு செய்யப்படுகிறது ?
7. இரண்டையும் கொண்டு செய்யப்படும் பொருள்கள் எவை ?

பயிற்சி

1. துண்டு துண்டாக, கட்டுக் கட்டாக—இவை அடுக்குத் தொடர்கள். இவை போன்ற வேறு நான்கு கூறு.

2. சாறு + ஐ = சாற்றை. இவ்வாறே (1) வயிறு + ஐ, (2) கயிறு + ஐ, (3) சோறு + ஐ—இவற்றைச் சேர்த்துப் படி.

கரும்பு + சாறு = கருப்பஞ்சாறு
கரும்பு + கழி = கருப்பங்கழி
கரும்பு + தோட்டம் = கரும்புத்தோட்டம்
கரும்பு + ஆலை = கரும்பாலை—இவற்றை நினைவில் வை.

3. கரும்பாலை, இறுகியவுடன், பழுப்புச் சர்க்கரை, கரும்பு.—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துச் சொல்.

4. சர்க்கரை செய்யப்படும் விதத்தைப் பற்றிப் பத்து வரிகள் எழுது.

5. (1) கம்பன் **ஓடினான்**
(2) கம்பன் ஓடி
(3) ஓடின கம்பன்—இம் மூன்று சொற்றொடர்களும் கம்பன் ஓட்டத்தைப் பற்றியனவே ஆகும். ஆனால் இவற்றுள் இருப்பவை (1) **ஓடினான்**, (2) ஓடி, (3) ஓடின என்னும் வினைச் சொற்கள். இம்மூன்றிலும் கருத்து முடிந்து நிற்கும் வினைச் சொல் எது ? **ஓடினான்** என்பதே கருத்து முற்றுப் பெற்ற **வினைச் சொல்.** ஓடி, ஓடின என்பன முற்றுப் பெறாத வினைச் சொற்கள். முற்றுப்பெற்ற வினைச்சொல் **வினைமுற்று** எனப்படும்.

6. இரண்டாம் பாடத்து மூன்றாம் பாராவிலுள்ள வினைமுற்று களைச் சொல்.



7. பாய் நெசவு

1. நூல் நூற்றல், ஆடை நெய்தல், தேனீ வளர்த்தல் என்பவை **குடிசைக் கைத்தொழில்கள்** எனப்படும். அவற்றைப் போலவே பாய் நெய்வதும் ஒரு கைத்தொழிலாகும். கிராம மக்கள் பலர் இத் தொழிலைச் செய்து பிழைக்கிறார்கள். நமது நாட்டில் ஒவ்வொரு வீட்டிலும் பாய் உபயோகப்படுகிறது என்பதை அறிந்துகொள்ளுதல் நமது கடமை அல்லவா?

2. நாம் உபயோகிக்கும் பாய் கோரைப் பாய் எனப்படும். அது ஒருவகைக் கோரையினால் நெய்யப் படுவதால் இப்பெயர் பெற்றது. கோரை, வாய்க்கால் களின் ஓரங்களில் அடர்ந்து வளரும். அதன் தண்டு கெட்டியாக இருக்கும். பாய் நெய்பவர் பச்சைக் கோரையை அறுத்து வருவர்; அதை எழுத்தாணியால் நார்போல் மெல்லியதாகக் கிழிப்பர்; கிழித்த பிறகு அவற்றை வெயிலில் உலர்த்துவர். வெயிலில் உலர்ந்த கோரை மஞ்சள் நிறமாக இருக்கும். பாய் நெய்பவர்

அவற்றைக் காயவைத்துக் கிழித்துக் கோரைகளைப் பல கட்டுகளாகக் கட்டிவைப்பர்.

3. பலநிறப் பாய்கள் நெய்யவேண்டுமானல் அவர்கள் என்ன செய்வார்கள்? அவர்கள் தாங்கள் கிழித்த கோரைகளைப் பலவித நிறங்கள் கலந்த தண்ணீரில் நனைத்து, நிறங்களை ஏற்றி உலரவைப்பார்கள்; பிறகு முன்போலவே அவற்றைச் சேர்த்துக் கட்டுகளாகக் கட்டிவைப்பார்கள்.

4. துணி நெய்வதற்குத் தறி இருப்பதுபோலவே பாய் நெய்வதற்கும் ஒருவகைத் தறி இருக்கிறது. அது சுமார் நான்கு அடி அகலமும் ஏழு அடி நீளமும் இருக்கும். பாய் நெய்பவர்கள் அந்தத் தறியில் நீளத்தில் ஓர் அங்குலம் விட்டுவிட்டு முறுக்கிய சணல் கயிறுகளை வரிவரியாகக் கட்டுவார்கள்; பிறகு கோரைக் கட்டுகளைப் பிரித்து நார்களைத் தண்ணீரில் நனைத்துப் பதப்படுத்துவார்கள். அந்த நார்களை ஒவ்வொன்ருகத் தறியிலிருந்து எடுத்து மேலும் கீழுமாக மாறிமாறிக் கோப்பார்கள்; இப்படிக் கோக்க ஒரு குச்சியைப் பயன்படுத்துவார்கள். படத்தைப் பாருங்கள்: தங்களுக்கு வேண்டும் நீளம் நெய்த பிறகு, பாயைத் தறியிலிருந்து எடுத்துவிடுவார்கள். பிறகு அவர்கள் அதன் இரண்டு (அகலமான) நுனிகளிலும் கோரை நழுவாமலிருக்க முடிச்சுகள் போடுவார்கள்; இரண்டு நீளமான ஓரங்களிலும் கோரைகளைச் சிறிதளவு மடித்துச் சணல் கயிற்ருல் தைப்பார்கள். இவ்வாறு ஒவ்வொரு பாயும் தயாரிக்கப்படும்.

5. சந்தர்ப்பம் கிடைக்கும்பொழுது, பாய் எவ்வாறு நெய்யப்படுகிறது என்பதை நேரிற் பார்த்து அறியுங்கள்.

கேள்விகள்

1. நாம் பாய் நெசவைப்பற்றி ஏன் அறிந்துகொள்ள வேண்டும்?
2. கோரைகள் எங்கே வளரும்?
3. கோரைகள், நெய்வதற்கு எவ்வாறு தயாரிக்கப்படும்?
4. வர்ணப் பாய்கள் நெய்யவேண்டுமானால், பாய் நெய்பவர் என்ன செய்வர்?
5. பாய் நெய்யும் தறியைப்பற்றிச் சொல்லப்பட்டுள்ள விவரங்கள் என்ன?
6. பாய் எவ்வாறு நெய்யப்படுகிறது?
7. பாய் நெய்த பிறகு அதனை நெய்தவர் என்னென்ன செய்வர்?

பயிற்சி

1. கோரைப் பாய், அடர்ந்து, எழுத்தாணி, பதப்படுத்தல், மடித்து—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துச் சொல்.

2. கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை அமைத்துப் படி:–

(1) பாய் —— நெய்யப்படுகிறது.

(2) வெய்யிலில் உலர்ந்த —— மஞ்சள் —— இருக்கும்.

(3) வேட்டி —— நெய்யப்படுகிறது.

3. நீ நேரிற் பார்த்த நூல் நூற்றல் அல்லது பாய் நெசவு, அல்லது துணி நெய்தல்பற்றிச் சில வாக்கியங்கள் சொல்.

4. இப்பாடத்தை நன்கு படித்து, இதனைக் கோரைப்புல் சொல்வது போலச் சொல்.

5. கண்ணன் **ஓடி** (வந்தான்)

பையன் **எழுந்து** (ஓடினான்)—இவற்றில் வந்துள்ள ஓடி, **எழுந்து** என்பவை வினைச்சொற்கள்; ஆனால் கருத்து முடிந்தவை அல்ல. இவை **எச்சம்** எனப்படும். இவை 'வந்தான்', 'ஓடினான்' என்னும் வேறு வினைச்சொற்களைத் தழுவியே தீரவேண்டும் குறைச் சொற்களாக இருக்கின்றன. இவ்வாறு வேறொரு வினைச்சொல்லைத் தழுவிநிற்கும் எச்சம் **வினையெச்சம்** எனப்படும். **வந்து, போய், நின்று, குனிந்து, எழுந்து—வினையெச்சங்கள்.**

6. இப்பாடத்தில் வந்துள்ள வினையெச்சங்களை எடுத்துக் கூறு.



8. உடற்பயிற்சி விளையாட்டுகள்

1. தொட்டிலில் கிடக்கும் குழந்தை கைகால்களை அசைப்பதை நீங்கள் கண்டதுண்டா? குழந்தை அப்படிச் செய்வதால்தான் அதன் உடம்பு வளர்ந்து பலம் பெறுகிறது. இது நமக்கு ஒரு பாடமாகும். அதாவது, ஒவ்வொருவரும் உடம்பால் உழைக்கவேண்டும் என்பது. இதற்காகவே பள்ளியில் பலவகை விளையாட்டுகளும் உடற்பயிற்சி முறைகளும் கற்பிக்கப்படுகின்றன.

2. சில பிள்ளைகள் விளையாடுவதில்லை; உட்கார்ந்த இடத்திலேயே பொம்மைபோல இருக்கிறார்கள். அவர்கள் உடல் உரமில்லாது மெலிந்து போகிறார்கள்; அத்துடன் பயங்கொள்ளிகள் ஆகிறார்கள். அவர்களால் தங்களையோ, தங்கள் பொருள்களையோ பகைவர்களிடமிருந்து காக்கமுடியாது. கல்வியைவிட உடல் வலிமையே சிறந்தது. சுவரை வைத்துக்கொண்டு தானே சித்திரம் எழுதவேண்டும்?

3. மேற்சொன்ன காரணங்களால் ஒவ்வொருவரும் தினந்தோறும் சிறிது நேரமேனும் உடற்பயிற்சி

செய்யவேண்டும்; காற்றோட்டமும் சூரிய வெளிச்சமும் உள்ள இடத்தில்தான் உடற்பயிற்சி செய்யவேண்டும். அதனைச் செய்யும்பொழுது வாயினால் மூச்சு விடக்கூடாது. அதனைச் செய்வதால் உடலுக்குள் இருக்கும் அழுக்கு வியர்வை மூலமாய் வெளிவந்து விடும்; இரத்தம் சுத்தப்படும். உடம்பில் உள்ள எல்லா உறுப்புகளும் பலம் பெறும். பெறவே, நோய் உடம்பில் அணுகாது.

4. காலால் நடப்பது நல்ல பயிற்சி. வேகமாய் நடப்பதால் கைகால்கள் அசையும்; வியர்வை ஏற்படும்; நல்ல காற்று உள்ளே செல்லும். இவ்வாறே ஓடுதலும் நீந்துதலும் நல்ல பயிற்சிகள். ஒவ்வொருவரும் நீந்தப் பழகவேண்டும். மேல்நாடுகளில் பெண்களும் நன்றாக நீந்துகிறார்கள். பள்ளிக்கூடத்திலோ, வீட்டிலோ தோட்டத்திற்கு நீர் இறைத்தலும் உடற்பயிற்சியே யாகும். அவ்வாறே நூல் நூற்பதும், துணி நெய்வதும் நல்ல பயிற்சிகள்.

5. கால் பந்து, கைப் பந்து ஆடுதல், ஓடுதல், தாண்டுதல், தண்டால் எடுத்தல், 'பார்' விளையாட்டு, ஊசலாடுதல் முதலிய பயிற்சிகளில் உடல் உழைப்பு ஏற்படுகிறது. அத்துடன் பிள்ளைகளுக்குள் ஒற்றுமை, துணிச்சல், மானவுணர்ச்சி, ஊக்கம் முதலிய குணங்களும் உண்டாகின்றன. ஆதலால் நீங்கள் பலவகை உடற்பயிற்சிகளிலும் நன்கு தேர்ச்சி பெறுங்கள்; ஒவ்வொருவரும் உடல் வலிமையில் வீமனாக இருக்க வேண்டும்.

அரும்பதவுரை

உரம் - வலிவு. தேர்ச்சி - திறமை. வீமன் - பாண்டவருள் ஒருவன்; பலவான். சித்திரம் - படம்.

கேள்விகள்

1. குழந்தை நமக்குக் கற்பிக்கும் பாடம் யாது?
2. எந்தப் பிள்ளைகள் தங்களைக் காக்க முடியாதவர்கள்?
3. 'சுவரை வைத்துக்கொண்டல்லவா சித்திரம் எழுத வேண்டும்?—இதன் கருத்தென்ன? தெளிவாகச் சொல்.
4. நாம் நாள்தோறும் உடற்பயிற்சி செய்யவேண்டும்.—ஏன்?
5. நாம் எங்கு உடற்பயிற்சி செய்யவேண்டும்?
6. உடற்பயிற்சி வகைகள் எவை?
7. பந்தாட்டம் முதலிய விளையாட்டுகளால் உண்டாகும் நன்மைகள் என்ன?
8. ஏற்றம் இறைப்பதால் இரண்டு நன்மைகள் உண்டாகின்றன.—அவை எவை?
9. மானவுணர்ச்சி என்பது யாது?
10. நீ எந்த விளையாட்டை விரும்புகிறாய்?—ஏன்?

பயிற்சி

1. உடற்பயிற்சி, மானவுணர்ச்சி, ஒற்றுமை, துணிவு, ஊக்கம்—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துச் சொல்.
2. ஒற்றுமை, மானம், ஊக்கம்—எதிர்ச் சொல் கூறு.
3. உனக்கு விருப்பமான விளையாட்டைப்பற்றிப் பதினைந்து வரிகள் எழுது.
4. உன் பள்ளியில் கற்பிக்கப்படும் விளையாட்டுகள் எவை?
5. பள்ளிக்கு வந்த பரதன்

தூங்கி விழித்த குழந்தை—இங்கு வந்துள்ள வந்த, விழித்த என்பவை வினைச்சொற்கள். ஆனால் இவை கருத்து முடிந்தவை அல்ல. ஆதலால் இவையும் எச்சம் எனப்படும். இவை பரதன், குழந்தை என்னும் பெயர்ச்சொற்களைத் தழுவித்தான் பொருள் முடிவு அல்லது விளக்கம் பெறவேண்டுபவை. இவ்வாறு ஒரு பெயர்ச்சொல்லைத் தழுவிநிற்கும் எச்சம் **பெயரெச்சம்** எனப்படும். **நின்ற, இருந்த, படுத்த, உறங்கின, சிரித்த—பெயரெச்சங்கள்.**

6. இப்பாடத்தில் வந்துள்ள பெயரெச்சங்களை எடுத்துக்கூறு.



9. போலீஸ் சேவகர்

(உரையாடல்)

கமலம் :—அப்பா, இங்கு நிற்கும் இவர் யார் ?

தகப்பனுர் :—இவர் போலீஸ் சேவகர்.

கமலம் :—இவர் ஏன் இங்கு நிற்கிருர் ? ஏன் அடிக்கடி கையை உயர்த்துகிருர் ?

தகப்பனுர் :—கமலா, இவர் இப்பொழுது நான்கு தெருக்கள் கூடும் இடத்தில் நிற்கிருர். அங்கும் இங்கும் செல்லும் பலவித வண்டிகள் ஒன்ருேடொன்று மோதிக்கொள்ளாமல் காக்க வேண்டுவது இவரது வேலே. அதனுல் இவர் ஒரு பக்கத்தில் செல்லும் வண்டிகளேயே போகவிடுவார்; அச்சமயத்தில் வேறு பக்கங்களிலிருந்து வரும் வண்டிகளேத் தம் கையை உயர்த்தி நிறுத்துவார். இதற்காகவே இவர் கையை அடிக்கடி உயர்த்துகிருர்.

கமலம் :—அப்பா, இவர் வேறு என்னென்ன வேலேகளேச் செய்வார் ?

தகப்பனூர் :—அம்மா, பொது மக்கள் தெருக்களில் அசுத்தம் செய்யாமலும் சண்டையிடாமலும் இவர் பார்த்துக்கொள்வார் ; இராக் காலங்களில் களவு நடவாமல் ஊரைச் சுற்றி வந்து காவல்செய்வார்.

கமலம் :—அப்பா, போலீஸ் சேவகர் கிராமங்களிலும் இருக்கிறூர்களா ?

தகப்பனூர் :—பெரிய கிராமங்களில் போலீஸ்காரர்கள் இருக்கிறூர்கள். அவர்கள் அலுவலகம் **போலீஸ் ஸ்டேஷன்** எனப்படும். அதில் ஏறக்குறையப் பத்துச் சேவகர் இருப்பார்கள். அவர்களுக்கு மேல் ஓர் அதிகாரி உண்டு. அவரது உத்தியோகப் பெயர் **சப்-இன்ஸ்பெக்டர்** என்பது. இவரும், இவருக்குக் கீழுள்ள போலீஸ்காரர்களும் இவர்களுக்குப் பக்கத்திலுள்ள சிறிய கிராமங்களையும் கவனித்துக் கொள்வார்கள்.

கமலம் :—இவர்கள் செய்யும் வேலையைக் கவனிக்க மேல் அதிகாரிகள் இருக்கிறூர்களா ?

தகப்பனூர் :—சப்-இன்ஸ்பெக்டருக்கு மேல் சர்க்கிள் இன்ஸ்பெக்டர், டிப்டி சூப்பிரென்டென்டென்ட், ஜில்லா சூப்பிரென்டென்டென்ட் முதலிய பெரிய உத்தியோகஸ்தர்கள் இருக்கிறூர்கள். அவர்கள், கீழ் உத்தியோகஸ்தர் செய்யும் வேலைகளைக் கவனிப்பார்கள்.

கமலம் :—அப்பா, சண்டையிடுபவர்களைப் பிடிக்கும் பொழுதும் திருடர்களைப் பிடிக்கும் பொழுதும் இவர்களுக்கு ஆபத்து நேரிடலாம் அல்லவா ?

தகப்பனூர் :—ஆம். சில சமயங்களில் ஆபத்து நேரிடலாம். ஆயினும், இவர்கள் உத்தியோகம் பொது மக்கள் நன்மைக்காக ஏற்பட்டது ஆதலால், இவர்கள்

பாராட்டத்தக்க பொது ஜனத் தொண்டர்கள் ஆவார்கள்.

அரும்பதவுரை

களவு - திருடு. அலுவலகம் - உத்தியோகம் செய்யும் இடம். தொண்டர் - தொண்டு செய்பவர்.

கேள்விகள்

1. போலீஸ் சேவகர் நாற்சந்தியில் நின்றுகொண்டு என்ன செய்கிறார்?
2. அவர் செய்யும் வேறு வேலைகள் எவை?
3. அவருடைய வேலைகளில் எவை ஆபத்தானவை?
4. அவர் பொது ஜனத் தொண்டர் என்பது எப்படி உண்மையாகும்?
5. போலீஸ் சேவகத்தில் உள்ள மேலதிகாரிகள் யாவர்?
6. கிராமத்தில் நடக்கும் திருடு முதலிய குற்றங்கள் எவ்வாறு நீக்கப்படுகின்றன?

பயிற்சி

1. நீ போலீஸ் சேவகரைக் கண்டதுண்டா?
2. போலீஸ் சேவகரின் வேலைகள் எவை என்பதை விளக்கி எழுது.
3. 'போலீஸ் சேவகர்களால் நாட்டுக்கு உண்டாகும் நன்மை' என்பது பற்றி ஒரு கட்டுரை எழுது.
4. கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை நிரப்பு :—
   (1) இவர் —— வீதிகள் —— இடத்தில் நிற்கிறார்.
   (2) இவர் —— சேவகர்.
   (3) அவரது —— —— சப்-இன்ஸ்பெக்டர்.
5. சம்பந்தன் சோற்றை உண்டான்.—இது ஒரு வாக்கியம் அல்லவா? இதில் வினைமுற்று எது? **'உண்டான்'** என்பது வினைமுற்று. இது சம்பந்தன் செய்த தொழிலை உணர்த்தும் சொல். இது வாக்கியத்தில் **பயனிலை** என்று சொல்லப்படும்.

   பயனிலை இல்லாமல் வாக்கியமே இராது.
6. எட்டாம் பாடத்தில் நான்காம் பாராவில் உள்ள பயனிலைகளை எடுத்து எழுது.



10. ஊருக்கு நல்லது

(பாட்டு)

1. ஊருக்கு நல்லது சொல்வேன்—எனக்
குண்மை தெரிந்தது சொல்வேன் ;
சீருக் கெல்லாம் முதலாகும்—ஒரு
தெய்வம் துணைசெய்ய வேண்டும்.

2. தீயினைக் கும்பிடும் பார்ப்பார்,—நித்தம்
திக்கை வணங்குந் துருக்கர்,
கோயிற் சிலுவையின் முன்னே—நின்று
கும்பிடும் ஏசு மதத்தார்.

3. யாவரும் பணிந்திடும் தெய்வம்,—பொருள்
யாவினும் நின்றிடும் தெய்வம்,
பாருக்குள்ளே தெய்வ மொன்று ;—இதில்
பற்பல சண்டைகள் வேண்டாம்.

—பாரதியார்

அரும்பதவுரை

சீர் - சிறப்பு. தெய்வம் - கடவுள். நித்தம் - நாள்தோறும். தீ - நெருப்பு. சிலுவை - கிறித்தவ மதத்தாரின் சின்னம்.

கேள்விகள்

1. சீருக்கெல்லாம் முதலாகும்.—எது ?
2. நால்வகை மதத்தார் யாவர் ?
3. அவர்கள் வணங்கிடும் தெய்வங்கள் யாவை ?
4. கடவுளின் தன்மை யாது ?
5. ஊருக்கு நல்லது எது ?

பயிற்சி

1. இப்பாடலின் கருத்தை உன் சொந்த நடையில் எழுது.

2. பாரதியாரைப் பற்றி நீ அறிந்தவற்றை ஒரு கட்டுரையாக எழுது.

3. நீ படத்தில் என்னென்ன பார்க்கிறாய் ? ஒவ்வொன்றையும் பற்றி ஒரு வாக்கியம் கூறு.

4. பிழைகளைத் திருத்து :—

(1) கோயிற் சிலுவையின் முன்னே நின்று கும்பிடும் பார்ப்பார்

(2) திக்கை வணங்கும் ஏசு மதத்தார்

(3) தீயினைக் கும்பிடும் துருக்கர்

5. **சம்பந்தன்** சோற்றை உண்டான். —இதில் 'உண்டான்' என்பது பயனிலை என்பதைச் சென்ற பாடத்தில் படித்தாய். அப் பயனிலைக்கு முன் **யார்** அல்லது **எது** என்னும் இரண்டில் ஏற்ற ஒன்றை வைத்து, '**யார்** உண்டான் ?' என்று கேள்வி கேள். '**சம்பந்தன்** உண்டான்' என்று பதில் வருகிறது. இது வாக்கியத்தில் **எழுவாய்** எனப்படும். எழுவாய்—ஒரு தொழிலைச் செய்யும் கருத்தா.

கோமளம் கோலம் போட்டாள்.—இதில் கோமளம்—**எழுவாய்.**

6. முதல் பாடத்து இரண்டாம் பாராவில் உள்ள எழுவாய்களை எடுத்துச் சொல்.

7. நான்காம் பாடத்து நான்காம் பாராவில் உள்ள எழுவாய், பயனிலைகளைக் கூறு.



11. கப்பல்

1. பழைய காலத்தில் வாழ்ந்த மக்கள் கடலைக் கடந்து செல்வதற்கு மரத்தால் ஆன கப்பல்களைப் பயன்படுத்தினர். கடலில் நீண்ட தூரம் செல்ல வேண்டிய கப்பல்களில் அடுக்கடுக்காகப் பாய்கள் கட்டப்பட்டன. இப் பாய்மரக் கப்பல்கள் வாணிகம் செய்யப் பயன்பட்டன; கடல் கடந்து நாடுகளைப் பிடிக்கவும் பயன்பட்டன.

2. ஏறக்குறைய நூற்றுநாற்பது ஆண்டுகட்கு முன்புதான் நீராவியால் ஓடும் கப்பல் செய்யப்பட்டது. பிறகு அறிவும் ஆராய்ச்சியும் வளர வளர, நீராவிக் கப்பல்களில் பல மாறுதல்கள் ஏற்பட்டன. இப்பொழுது அவை மிதக்கும் மாளிகைகளாகக் காட்சி அளிக்கின்றன; ஆயிரக்கணக்கான மைல் தூரம் அச்சமின்றிப் பிரயாணம் செய்கின்றன.

3. இக்கப்பல்களில் பலவகை உண்டு. ஒரு நாட்டிலிருந்து வேறு நாடுகளுக்குப் பண்டங்களை ஏற்றிச்

செல்பவை **சாமான் கப்பல்கள்** எனப்படும். மக்களை மட்டும் பல நாடுகளுக்கு ஏற்றிச் செல்லும் கப்பல் **பிரயாணிகள் கப்பல்** எனப்படும். போர்க் காலங்களில் பகைவரையும் அவர்கள் நாட்டையும் தாக்குவதற்காகக் கட்டப்பட்டுள்ள கப்பல்கள் **போர்க் கப்பல்கள்** எனப்படும். நீருக்குள்ளேயே பல மைல் தூரம் முழுகிச் செல்லும் கப்பல்களும் உண்டு. அவை போர்க்காலத்தில்தான் மிகுதியாகப் பயன்படும். அவை பகைவர் கப்பல்களைத் தாக்க உபயோகப்படும். அவற்றிற்கு **நீர்மூழ்கிக் கப்பல்கள்** என்பது பெயர்.

4. இக் கப்பல்களில் பார்க்க அழகானது பிரயாணிகள் கப்பலேயாகும். அக்கப்பல்களில் மிகச் சிறந்தது **குயின் எலிசபெத்** என்பது. இது உலகில் உள்ள எல்லாக் கப்பல்களிலும் பெரியது. இது அமெரிக்காவுக்கும் இங்கிலாந்திற்கும் இடையில் பிரயாணம் செய்கிறது. இக்கப்பலின் உயரம் 234 அடி ; அகலம் 118 அடி ; நீளம் 1031 அடி. இக் கப்பலில் ஆயிரத்து இருநூறு பேர் வேலை செய்கின்றனர். 2315 பேர் இதில் பிரயாணம் செய்யலாம்.

5. இக்கப்பலை ஒரு பெரிய நகரம் என்று சொல்லலாம். இதில் பந்து விளையாடுவதற்கும், வெயிலில் உலாவுவதற்கும் இடம் உண்டு. இதில் இரண்டு சினிமாக் கொட்டகைகள் இருக்கின்றன. பலவகைக் கடைகள், வானொலி நிலையம், மருத்துவ நிலையம், பெரிய நூல் நிலையம், உடற்பயிற்சிச் சாலை, நடன அரங்கம், முடி அலங்கரிக்கும் கடை, நீந்துவதற்கு உரிய குளம், பிரார்த்தனைக்கு உரிய இடங்கள், உணவு மண்டபம் முதலியன இருக்கின்றன. இதில் பதினான்கு மாளிகைகள் இருக்கின்றன. அவற்றிற்குப் போகவும் கீழே வரவும் 35 மின்சாரத் தூக்கிகள் இருக்கின்றன.

6. இக்கப்பல் எண்ணெயால் ஓடுவது. இது மணிக்கு 30 மைல் தூரம் செல்லும். இக்கப்பல் நடுக் கடலில் செல்லும்போதும் பிரயாணிகள் தம்தம். நாடு களிலுள்ள உறவினர்களுடன் டெலிபோன் மூலம் பேச லாம்; தந்தி அடிக்கலாம்; உலகச் செய்திகளை ரேடியோ மூலம் கேட்கலாம். இக்கப்பலிலேயே செய்தித்தாள் ஒன்று தினந்தோறும் வெளியாகிறது. அறிவும் ஆராய்ச்சியும் பெருகப் பெருக, இனிமேல் இக்கப்பலிலும் என்னென்ன மாறுதல்கள் உண் டாகுமோ! அறிந்தவர் யார்!

அருஞ்பதவுரை

இடையில் - நடுவில். போர் - சண்டை. நீர் மூழ்கிக்கப்பல் - நீருக்குள் மூழ்கிச் செல்லும் கப்பல். வானொலி - ரேடியோ. அரங்கம் - மேடை.

கேள்விகள்

1. பழைய காலத்துக் கப்பல்கள் யாவை? அவை எவ்வாறு கடலில் பிரயாணம் செய்தன?
2. நீராவிக் கப்பல் எப்பொழுது ஏற்பட்டது?
3. கப்பல்கள் எத்தனை வகைப்படும்? ஒவ்வொன்றின் உப யோகம் என்ன?
4. 'குயின் எலிசபெத்' கப்பலைப் பற்றி உனக்கு என்ன தெரியும்?

பயிற்சி

1. பாய்மரக் கப்பல், பழைய காலம், நீராவிக் கப்பல், வானொலி, நடன அரங்கம், மின்சாரத் தூக்கி—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துக் கூறு.
2. நீ பார்த்த படகு அல்லது கப்பலைப்பற்றிச் சில வாக்கியங் கள் சொல்.
3. எதிர்ச்சொல் கூறு :—நன்மை, பழைய, அறிந்தவர், கண்டவர்.
4. குயின் எலிசபெத்தைப் பற்றி உன் நண்பனுக்கு ஒரு கடிதம் எழுது.

5. படகுக்கும் கப்பலுக்கும் உள்ள வேறுபாடுகள் எவை?
6. கப்பலின் உபயோகத்தைப் பற்றிப் பத்து வரிகள் எழுது.
7. கடலைப் பற்றி உனக்குத் தெரிந்த விவரங்களை எழுது.
8. கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை அமைத்து எழுது:

(1) கப்பல் ———— செல்லும்.
(2) புகைவண்டி ———— ஓடும்.
(3) ஆகாய விமானம் ———— செல்லும்.
(4) நீர் மூழ்கிக் கப்பல் ———— செல்லும்.

9. சம்பந்தன் **சோற்றை** உண்டான்.—இதில் சம்பந்தன்—எழுவாய். உண்டான்—பயனிலை. உண்டான் என்பதற்கு முன் யாரை, எதை என்பவற்றில் ஏற்ற ஒன்றை வைத்து, 'எதை உண்டான்?' என்று கேள்வி கேள். 'சோற்றை உண்டான்' என்று பதில் வருகிறது. இது வாக்கியத்தில் **செயப்படுபொருள்** எனப்படும்.

சோற்றை—செயப்படுபொருள். இப்பொழுது இந்த வாக்கியத்தில்,

(1) சம்பந்தன்—எழுவாய்
(2) உண்டான்—பயனிலை
(3) சோற்றை—செயப்படுபொருள்.

6. கீழ்வரும் வாக்கியங்களில் உள்ள செயப்படுபொருளைக் கூறு :—

(1) கண்ணன் வெண்ணெய் தின்றான்.
(2) பரந்தாமன் பல்லை விளக்கினான்.
(3) கிழவி வடை விற்கிறாள்.
(4) குழந்தை பால் குடிக்கிறது.



12. கிராம சுகாதாரம்

1. நமது நாட்டில் நகரங்கள் சில; கிராமங்கள் பல. கிராமங்கள் லட்சக்கணக்கில் இருக்கின்றன. கிராமங்களில் வாழ்கின்ற மக்களின் தொகை பல கோடி யாகும். நமக்கு வேண்டும் உணவுப் பொருள்களை எல்லாம் பயிராக்கித் தருபவர்கள் கிராமவாசிகளே. அரசாங்கத்திற்கு நிலவரி கொடுப்பவர்களும் அவர் களே. சுருங்கச் சொல்ல வேண்டுமானால், நமது நாடு என்னும் மனிதனுக்குக் கிராமங்கள் முதுகெலும்பு ஆகும். ஆதலால் கிராமவாசிகள் நோயற்ற வாழ்வு வாழ வேண்டும்; வறுமை இல்லாத வாழ்வு வாழ வேண்டும்.

2. கிராமத்தில் குடிசை வீடுகளே பலவாகும். ஒவ் வொரு குடிசைக்கும் வாயில் ஒன்று இருக்கும்; ஜன்னல்கள் இரா. வாயிற் கதவை மூடிவிட்டால், குடிசைக்குள் காற்று அல்லது வெயில் நுழைய வழி யில்லை. குடிசைகள் வரிசையாகக் கட்டப்படுவதும் இல்லை. கூரை வீடு ஆயினும், உயர்ந்த சுவர்களை

எழுப்பி, ஜன்னல் வைக்க வேண்டும்; வீட்டிற்கு முன்புற வாயிலும் பின்புற வாயிலும் இருக்கவேண்டும்; வீட்டிற்குள் சாமான்களை ஒழுங்காக வைத்துக்கொள்ள வேண்டும்; ஜன்னல்கள் மறையும்படி அடுக்குப் பானைகளை அடுக்கலாகாது.

3. கிராமங்களில் குப்பைக் குழிகள் இருப்பதில்லை. கிராம மக்கள் வீட்டுக்கு முன்னும் பின்னும் குப்பைகளைக் கொட்டுவது வழக்கம். வீட்டின் அழுக்குத் தண்ணீர் தெருவெல்லாம் ஓடும். குப்பையின் நாற்றமும், அழுக்குத் தண்ணீரின் நாற்றமும் எங்கும் வீசும். சில இடங்களில் அழுக்குத் தண்ணீர் தேங்கிக் கிடக்கும். அவைகளில் கொசுக்கள் மொய்க்கும். இவற்றால் கிராமத்தில் நோய் பரவுவது இயற்கை. நாள்தோறும் வீடுகளையும் தெருக்களையும் குப்பை இல்லாமல் கூட்ட வேண்டும்; தெருவில் அழுக்குத் தண்ணீர் தேங்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

4. கிராமத்தில் மனிதர்க்குத் தனிக் குளமும் கால் நடைகளுக்குத் தனிக் குளமும் இருக்கவேண்டும். காற்றைப் போலத் தண்ணீரும் நமக்கு மிகவும் தேவையானது. அது குடிக்கவும் குளிக்கவும் உணவு சமைக்கவும் பயன்படுகிறது. ஆதலால் தண்ணீர் சுத்தமாக இருக்கவேண்டும். அழுக்கு நீரில் குளிப்பதால் சொறியும் சிரங்கும் உண்டாகும். அழுக்கு நீரைக் குடிப்பதால் நரம்புச்சிலந்தி, வாந்திபேதி முதலிய நோய்கள் உண்டாகும். ஆதலால், மனிதர் குளிக்க ஒரு குளமும் தண்ணீர் எடுக்கத் தனிக் குளமும் இருப்பது நல்லது.

5. வீட்டிற்குப் பின்புறம் நெடுந்தூரத்தில் மாட்டுத் தொழுவங்கள் இருக்க வேண்டும். மாட்டுச்

சாணத்தை வீட்டில் திரட்டி வைக்கக்கூடாது. ஏனெனில், அதிலிருந்து புழுக்கள் பெருகும்.

6. இதுவரையில் சொல்லிவந்த விவரங்களைக் கொண்டு அமைக்கப்பட்டதே படத்தில் உள்ள புதிய கிராமம். இக்கிராமத்தாருக்கு நல்ல காற்றுக் கிடைக்கிறது; சுத்தமான தண்ணீர் கிடைக்கிறது; நோய்கள் வருவதில்லை. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் அல்லவா?

அரும்பொருள்

கூட்ட - சேர்க்க. வறுமை - தரித்திரம், பணம் இல்லாமை.

கேள்விகள்

1. நமது நாட்டில் நகரங்கள் அதிகமா? கிராமங்கள் அதிகமா?
2. கிராமமக்கள் நலத்தைப் பற்றி நாம் ஏன் கவலைப்பட வேண்டும்?
3. கிராமத்தில் வீடுகள் எப்படி இருக்கின்றன? அவை எப்படி இருக்க வேண்டும்?
4. கிராமத்தார் தங்கள் வீடுகளை எவ்வாறு வைத்துக்கொள்ள வேண்டும்?
5. அவர்கள் தண்ணீரைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டும் விவரங்கள் எவை?
6. மாட்டுத் தொழுவம் எங்கு அமைய வேண்டும்? ஏன்?
7. கிராம மக்கள் எவற்றைப் பின்பற்ற வேண்டும்?

பயிற்சி

1. முன்னும் பின்னும், ஏறவும் இறங்கவும்—எனச் சில தொடர்கள் வரும். அவற்றை அங்கங்குக் கவனித்துக்கொள். இந்த இரண்டு தொடர்களை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துச் சொல்.

2. கோடிட்ட ஒவ்வோரிடத்திலும் தக்க சொல்லை அமைத்துப் படி :—

கிராமத்தில் வாழ்பவன் கிராமவாசி.

(1) நகரத்தில் வாழ்பவன் ——.

(2) காட்டில் வாழ்பவன் ——.
(3) காசியில் வாழ்பவன் ——.

3. சுகாதார விதிகளின் சிறப்பினை விளக்கி உன் நண்பனுக்கு ஒரு கடிதம் எழுது.

4. சுகாதாரக் கருத்துகளைத் தொகுத்து ஒரு கட்டுரை எழுது.

5. இப்பாடத்து மூன்றும் பாராவிலுள்ள வாக்கியங்கள் எத்தனை? அவற்றிலுள்ள எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் களைக் கீழ்வரும் கட்டத்தில் எழுது.

எண்	எழுவாய்	பயனிலை	செயப்படுபொருள்
1			
2			
3			
4			
5			
6			

6. இப்பாடத்தில் உள்ள படத்தைப் பார்த்து (1) தெருக்கள், (2) வீடுகள், (3) கிணறு, (4) விளக்கு, (5) தொழுவம் இவற்றைப் பற்றி நீ அறிவதை எழுது.

7. உன் கிராம அமைப்பு, தெருக்கள், விளக்கு வசதி, தண்ணீர் வசதி, சுகாதார நிலைமை, வீடுகளின் அமைப்பு—இவை பற்றிப் பத்து வரிகள் எழுது.

8. நீ குடியிருக்கும் தெருவைப் பற்றிச் சில வரிகள் எழுது.

9. உன் ஊரில் உள்ள குளங்களைப் பற்றிச் சில வரிகள் எழுது.



13. நூலகமும் படிப்பகமும்

1. பயிர்த்தொழில், கைத்தொழில் முதலான பல பொருள் சம்பந்தமான நூற்றுக்கணக்கான நூல்கள் வைக்கப்பட்டு, பலருக்கும் பயன்படும் இடம் **நூல் நிலையம்** அல்லது **நூலகம்** எனப்படும். நாட்டில் வெளியிடப்படும் செய்தித்தாள்கள் பலவும் வரவழைக்கப்பட்டுப் படிக்கப்படும் இடம் **படிப்பகம்** எனப்படும்.

2. நூலகத்தில் பல பீரோக்கள் இருக்கும். அவற்றில் புத்தகங்கள் வரிசை வரிசையாக அடுக்கப்பட்டிருக்கும். அவற்றுள் கதை நூல்கள், பயிர்த்தொழில் நூல்கள், கைத்தொழில் நூல்கள், சரித்திர நூல்கள், கல்வி சம்பந்தமான நூல்கள் எனப் பலவகைப் பிரிவுகள் உண்டு. ஒவ்வொரு பிரிவிலும் தேர்ச்சிபெற விரும்புவோர் அவரவர்க்கு வேண்டும் நூல்களை எடுத்துப் படிக்க நூலகத்தில் வசதி உண்டு. பள்ளிக்கூடத்தில் நூல்நிலையம் உண்டு. அது பிள்ளைகளுக்கு

வேண்டும் கதைநூல்கள், பலவகைச் சாஸ்திர நூல்கள் முதலியவற்றைப் பெற்றிருக்கும்.

3. சென்னை, கல்கத்தா, பம்பாய் போன்ற பெரிய நகரங்களில் ஆயிரக்கணக்கான நூல்களைக்கொண்ட பெரிய நூல்நிலையங்கள் இருக்கின்றன. அவை அரசாங்கத்தாரால் வைத்து நடத்தப்படுகின்றன. பல நாடுகளில் வெளியாகும் புதிய நூல்கள் எல்லாம் வரவழைக்கப்பட்டு அங்கு வைக்கப்பட்டு இருக்கும். எந்த விஷயத்தைப்பற்றி நாம் அறியவிரும்பினாலும், அதற்கு ஏற்ற நூல்கள் பல அங்கே வைக்கப்பட்டிருக்கும். சென்னையில் உள்ள அரசாங்க நூல்நிலையத்தின் பெயர் **கன்னிமாரா நூல்நிலையம்** என்பது. சில நகரங்களில் நகரசபையார் வைத்து நடத்தும் நூல் நிலையங்களும் உண்டு.

4. கிராம மக்களுக்கும் பலபொருள் பற்றிய அறிவு பரவவேண்டுமானால், ஒவ்வொரு கிராமத்திலும் சிறிய நூல்நிலையங்கள் ஏற்படவேண்டும். அவற்றில் அவர்களுக்குத் தேவையான பயிர்த்தொழில்பற்றிய நூல்களும் கைத்தொழில்பற்றிய நூல்களும் நீதி உணர்த்தும் கதை நூல்களும் கூட்டுறவு இயக்கம் பற்றிய நூல்களும் எளிய செய்யுள் நூல்களும் இருக்க வேண்டும். கிராம மக்கள் தங்கள் ஓய்வு நேரங்களில் அங்குச் சென்று நூல்களைப் படித்து அறிவு பெறலாம்.

5. படிப்பகம் நூலகத்தை அடுத்தும் இருக்கும்; தனித்தும் இருக்கும். அங்கு நாள் தாள்கள், வாரத் தாள்கள், மாதத் தாள்கள் முதலியன வரவழைக்கப் படும். பொதுமக்கள் அவற்றைப் படித்து நாள்தோறும் உலகத்தில் நடைபெறும் பலவகைச் செய்திகளையும்

அறிந்துகொள்ளலாம். செய்தித் தாள்களில் பிற நாடுகளில் நடைபெறும் பயிர்த்தொழில், கைத்தொழில், கல்வி, போர் முதலிய பல பொருள்பற்றிய செய்திகளும் அடிக்கடி வெளிவருகின்றன. ஆதலால் செய்தித் தாள்கள் உழவர்க்கும் தேவை, தொழிலாளர்க்கும் தேவை, அனைவர்க்கும் தேவை ஆகும்.

6. இதுவரையில் கூறிய விவரங்களிலிருந்து நூலகமும் படிப்பகமும் நமது அறிவு வளர்ச்சிக்கு மிகவும் அவசியமானவை என்பதை நன்கு அறியலாம். நீங்கள் உங்கள் பள்ளிக்கூட நூலகத்தையும் படிப்பகத்தையும் நன்குய்ப் பயன்படுத்துகிறீர்களா ?

அரும்பதவுரை

செய்தித்தாள் - பத்திரிகை. செய்தி - சமாச்சாரம்.

கேள்விகள்

1. நூலகம், படிப்பகம்—இவைகளை விளக்கு.
2. நூலகத்தில் இருக்கவேண்டுவன எவை ?
3. சென்னையில் உள்ள அரசாங்கத்தார் நூல்நிலையம் எது ?
4. கிராம மக்களுக்குப் பல பொருள்கள் பற்றிய அறிவு பெருக நாம் என்ன செய்யவேண்டும் ?
5. படிப்பகத்தில் எவை இருக்கும் ?
6. செய்தித்தாள்கள் படிப்பதால் உண்டாகும் நன்மைகள் யாவை ?

பயிற்சி

1. 'செய்தித்தாள் அனைவர்க்கும் தேவை'—என்பதுபற்றிப் பத்து வரிகள் எழுது.
2. நூலகத்தின் இன்றியமையாமையைக் குறித்து ஒரு சிறு கட்டுரை வரை.
3. நீ கண்ட ஒரு நூலகத்தைப்பற்றிச் சில வரிகள் எழுது.

4. கோடிட்ட இடங்களைத் தக்க சொற்களால் நிரப்பு :—

(1) சென்னையிலுள்ள —— பெயர் —— என்பது.

(2) அவை —— வைத்து நடத்தப்படுகின்றன.

(3) —— அனைவர்க்கும் தேவை.

5. நீ நன்கு அறிந்த படிப்பகத்தைப் பற்றிச் சில வாக்கியங்கள் எழுது.

6. நீ அறிந்த சில தமிழ்ச் செய்தித் தாள்களின் பெயர்களைச் சொல்.

7. பத்திரிகை படிப்பதனால் உண்டாகும் நன்மைகளை, நீ அறிந்தவரை, சொல்.

8.

நாள்	வாரம்	மாதம்

இவற்றில் பொருத்தமான சொல்லைக் கீழே கோடிடப்பட்டுள்ள இடத்தில் அமைத்துப் படி :—

(1) தினமணி என்பது ———— பத்திரிகை.

(2) ஆனந்த விகடன் ———— பத்திரிகை.

(3) ஆனந்த போதினி ———— பத்திரிகை.

9. நாற்காலி, பள்ளிக்கூடம், சித்திரை, தலை, நன்மை, பொங்கல்—இவை எல்லாம் பெயர்ச்சொற்களே. இவற்றில்,

(1) நாற்காலி—ஒரு பொருளின் பெயர்.

(2) பள்ளிக்கூடம்—ஒரு இடத்தின் பெயர்.

(3) சித்திரை—ஒரு காலத்தின் பெயர்.

(4) தலை—ஒரு சினையின் பெயர். சினை - உறுப்பு.

(5) நன்மை—ஒரு குணத்தின் பெயர்.

(6) பொங்கல்—பொங்குதல் என்னும் தொழிலின் பெயர்.

10. இப்பாடத்தில் வந்துள்ள அறுவகைப் பெயர்ச் சொற்களைக் கூறு.

14. காக்கையும் முத்துமாலையும்

கதைப் படம்



கேள்விகள்

1. காகம் யாரை நண்பனுகக் கொண்டது ?
2. காக்கையின் வருத்தத்திற்குக் காரணம் யாது ?
3. நரி காக்கைக்குச் சொன்ன யோசனை என்ன ?
4. காகம் அதைக் கேட்டு என்ன செய்தது ?
5. முத்துமாலையைப் பெற அரசி என்ன செய்தாள் ?
6. முத்துமாலையைக் காகம் என்ன செய்தது ?
7. காகத்தின் வருத்தம் எவ்வாறு நீங்கியது ?
8. நீ இக்கதையிலிருந்து அறிவது யாது ?

பயிற்சி

1. இக் கதையைக் காகம் சொல்வது போலச் சொல்.
2. இதனை நரி கூறுவது போலக் கூறு.
3. இதனையே பாம்பு சொல்வது போலச் சொல்.
4. இதைப் போன்று நீ கேட்ட வேறு கதைகளுள் ஒன்றினை எழுது.
5. (1) காகம், முத்து, மாலை, அரசி, வேலையாட்கள், மரம், பாம்பு, முட்டை, நரி.—இவை **பொருட் பெயர்கள்.**

(2) புற்று, அரண்மனை, வீடு, காடு, மலை, ஆறு, நாடு, தேசம்.—இவை **இடப் பெயர்கள்.**

(3) வருஷம், மாதம், வாரம், நாள், காலை, மாலை, பொழுது, இரவு, சித்திரை, வியாழக்கிழமை.—இவை **காலப் பெயர்கள்.**

6. கீழ்வருவன என்னென்ன பெயர்ச் சொற்கள் என்பதை எடுத்து எழுது :—

போலீஸ் நிலையம், பள்ளிக்கூடம், பள்ளித் தோட்டம், சர்க்கரை ஆலை, நாடு, மருந்து, மருத்துவ நிலையம், நகரம், காவிரியாறு, துப்பாக்கி, கோடைக்காலம், காலை வேளை, கார்த்திகை மாதம்.

7. 13-ஆம் பாடத்திலிருந்து அறுவகைப் பெயர்ச் சொற்களுக்கும் ஒவ்வோர் உதாரணம் கொடு.
8. 7-ஆம் பாடத்து நான்காம் பாராவில் உள்ள எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்களை எடுத்து எழுது.

15. ஒற்றுமை

(பாட்டு)

ஒற்றுமை யாக உழைத்திடுவோம்—நாட்டில்
உற்ற துணைவராய் வாழ்ந்திடுவோம்;
வெற்றுரை பேசித் திரியவேண்டாம்—இன்னும்
வீணாய்ப் புராணம் விரிக்கவேண்டாம். (1)

கீரியும் பாம்புமாய்ச் சண்டையிட்டுச்—சாதி
கீழென்றும் மேலென்றும் நாட்டிவிட்டு
பாரதத் தாய்பெற்ற மக்களென்று—நிதம்
பல்லவி பாடிப் பயனெதுவோ? (2)

சாதி இரண்டலால் வேறுளதோ?—ஔவைத்
தாயின் உரையும் மறந்தீரோ?
ஆதி இறைவன் வகுத்ததுவோ?—மக்கள்
ஆக்கிய கற்பனை தானிதுவோ? (3)

வீட்டுக்குள் சண்டைகள் போடுவதேன்—கூரை
வெந்து விழுவதும் கண்டிலீரோ?
நாட்டுக்கு நன்மையை நாடுபவர்—இந்த
நாடகம் ஆடல் நகைப்பலவோ? (4)

—கவிமணி–தேசிக விநாயகம் பிள்ளை

அருஞ்சொற்பதவுரை

வெற்றுரை - பயனற்ற பேச்சு. நிதம் - நாள்தோறும்.

கேள்விகள்

1. நாட்டின் உற்ற துணைவராய் வாழ்ந்திட நாம் செய்ய வேண்டுவது என்ன?
2. நிதம் பாடும் பல்லவி எது?
3. அதனைப் பாடுவதனால் பயனில்லை என ஆசிரியர் கூறுவது ஏன்?

4. ஔவைத் தாயின் உரை யாது?

5. நாட்டின் நன்மை நாடுபவர் எத்தன்மையராய் இருத்தல் வேண்டும்?

பயிற்சி

1. 'ஒற்றுமையே சிறந்தது' என்பது பற்றி ஒரு கட்டுரை எழுது.

2. 'ஒற்றுமை' என்பது குறித்து நீ அறிந்த கதைகளைச் சொல்.

3. துணைவராய், கற்பனை, பல்லவி, பாரதத் தாய், நாடகம், ஔவைத் தாய்—இவைகளை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துச் சொல்.

4. எதிர்ச் சொற்கள் கூறு :—

ஒற்றுமை, நன்மை, சிறிய, பாடி, வேண்டா, திரி, நாடுபவர்.

5. (4) தலை, கால், விரல், வால், பாதம், கிளை, இலை, மிலாறு, பூ, விழுது.—இவ்வாறு வழங்கும் ஒரு பொருளின் பல வேறு பகுதிகள் (உறுப்புகள் அல்லது சினைகள்) **சினைப் பெயர்** எனப் படும்.

(5) நன்மை, தீமை, பசுமை, வெண்மை, கருமை, வெம்மை, தண்மை—என, ஒரு பொருளின் குணத்தை உணர்த்தும் பெயர் **குணப் பெயர்** எனப்படும்.

(6) பொங்கல், வற்றல், கடையல், மசியல், துவையல், பொரியல், துவட்டல், வருதல், போதல், வரவு, செலவு—இவ்வாறு ஒரு பொருளின் தொழிலை உணர்த்தும் பெயர்கள் **தொழிற் பெயர்கள்** எனப்படும்.

6. இந்நூலில் பன்னிரண்டு, பதின்மூன்றும் பாடங்களில் வந்துள்ள சினைப்பெயர்கள், குணப்பெயர்கள், தொழிற்பெயர்களை எடுத்து எழுது.

16. குறிப்புப் புத்தகம்

(உரையாடல்)

தாயார் :—அன்னக்கிளி, நீ என்ன எழுதிக் கொண்டிருக்கிருய்? சாப்பிட நேரம் ஆகவில்லையா?

அன்னக்கிளி :—அம்மா, காலையில் நடந்த நிகழ்ச்சி ஒன்றை எனது **குறிப்புப் புத்தகத்தில்** எழுதிக்கொண்டிருக்கிறேன். நாங்கள் எங்கள் ஆசிரியர் யோசனைப்படி ஒரு நோட்டுப் புத்தகம் வைத்திருக்கிரோம்; அதில் அறிவைத் தரும் சிறந்த செய்திகளைக் குறித்துவைக்கிரோம். அதனால் அதற்குக் **குறிப்புப் புத்தகம்** என்பது பெயர். நான் அக் குறிப்புப் புத்தகத்தில் இப்பொழுது எழுதிக்கொண்டிருக்கிறேன்.

தாயார் :—அம்மா, நீ எழுதி முடித்தவுடன் எனக்கு வாசித்துக்காட்டு. அந்த நிகழ்ச்சியைக் கேட்க நான் ஆசைப்படுகிறேன்.

அன்னக்கிளி :—(அன்னக்கிளி பத்து நிமிஷங்களுக்குள் அந்த நிகழ்ச்சியைப் பற்றி எழுதி முடித்தாள்; அதைத் தன் தாயாரிடம் வாசித்துக் காட்டினுள். அவள் வாசித்துக் காட்டியது கீழ்வரும் பகுதியாகும்.)

நிகழ்ச்சி

நானும் என் அண்ணனும் காலையில் காய்கறி வாங்கக் கடைக்குச் சென்ரோம். எங்களுடன் எங்கள் வகுப்பு மாணவன் ஒருவனும் வந்தான். நாங்கள் மூவரும் கடைத் தெருவுக்குச் சென்று காய்கறிகள் வாங்கினேம். வீட்டிற்கு வரும் வழியில் ஒரு சோடாக் கடையில் இருவர் உரக்கப் பேசிக்கொண்டிருந்தனர்.

அவர்கள் வாய்ச் சண்டை முற்றியது. உடனே அங்குச் சோடாப் புட்டிகள் பறக்க ஆரம்பித்தன.

இந்நிலையில் நானும் அண்ணனும் ஒரு வீட்டினுள் சென்றுவிட்டோம். என் வகுப்பு நண்பன் அங்குச் சென்று பார்த்துவரப் போவதாகச் சொன்னான்; அண்ணன் தடுத்தும் கேட்கவில்லை; சண்டை நடந்து கொண்டிருந்த இடத்திற்குச் சென்றான். நாங்கள் இருவரும் அவ்வீட்டிலேயே ஒருபுறம் நின்றிருந்தோம். சிறிது நேரத்திற்குள் 'ஓ' வென்ற அலறலோடு என் வகுப்பு மாணவன் ஓடிவந்தான். அவன்மீது கண்ணாடித் துண்டுகள் நன்றாகக் குத்திவிட்டன. இரத்தம் வழிந்துகொண்டிருந்தது. நாங்கள் உடனே அவனை மருத்துவ நிலையத்திற்கு அழைத்துச் சென்றோம்; மருந்து போட்டவுடன் அவனை வண்டியிலமர்த்தி வீட்டில் சேர்த்தோம். வரும்பொழுது நான் அண்ணனைப் பார்த்து, "அண்ணா! 'துஷ்டரைக் கண்டால் தூர விலகு' என்னும் பழமொழியின் பொருள் இந்த நிகழ்ச்சியிலிருந்து நன்றாய்த் தெரிகிறது," என்றேன். என் அண்ணன், "ஆம். ஆம். அத்துடன் இதனையும் நினைவில் வைத்துக்கொள்," என்று கீழ்வரும் பாட்டைக் கூறினான்.

"கொம்புளதற் கைந்துமுழம் குதிரைக்குப் பத்துமுழம்
வெம்புகரிக் காயிரந்தான் வேண்டுமே—வம்புசெறி
தீங்கினர்தம் கண்ணில் தெரியாத தூரத்தில்
நீங்குவதே நல்ல நெறி."

தாயார் :—என் செல்வமே! நீ எழுதியிருப்பது ஒரு கட்டுரை போல இருக்கிறது. இந்த நிகழ்ச்சி சிறந்த படிப்பினையைத் தருவதுதான். நீ இப்படியே பல நிகழ்ச்சிகளையும் எழுதிக்கொண்டுவா.

அரும்பொருள்

கொம்புளது - கொம்புள்ள மாடு முதலிய பிராணிகள். வெம்பு - கோபிக்கும். கரி - யானை. வம்பு - குறும்புத்தனம். செறி - நிறைந்த. தீங்கினர் - கெட்டவர். நெறி - வழி.

கேள்விகள்

1. குறிப்புப் புத்தகம் என்பது யாது?
2. அன்னக்கிளி காலையில் யாருடன் எங்குச் சென்றாள்?
3. வழியில் என்ன நடந்தது?
4. அவள் வகுப்பு மாணவன் செய்த தவறு யாது?
5. அத் தவற்றால் அவன் அடைந்த பயன் யாது?
6. அன்னக்கிளியும் அவள் அண்ணனும் அம்மாணவனுக்குச் செய்த உதவி என்ன?
7. இந் நிகழ்ச்சியிலிருந்து அன்னக்கிளி அறிந்த உண்மை என்ன?
8. அவள் அண்ணன் கூறிய பாட்டு யாது? அதன் கருத்து என்ன?

பயிற்சி

(1) வெள்ளையன் வீட்டிற்கு வெள்ளையடித்தான்.

(2) முருகன் நேற்று இங்கு வந்து பொங்கல் உண்டான்.

(3) நீ தோட்டத்தில் மரக்கிளையை நடு.

(4) கோபாலன் வரவு செலவுஅறியாமல் மூன்றாண்டுகளை வீணே கழித்தான்.—இவற்றிலுள்ள அறுவகைப் பெயர்களைக் கீழ் வரும் கட்டத்தில் எடுத்து எழுது.

எண்	பொருட் பெயர்	இடப் பெயர்	காலப் பெயர்	சினைப் பெயர்	குணப் பெயர்	தொழிற் பெயர்
1						
2						
3						
4						

17. இயேசு நாதர்

(மௌன வாசிப்பு)

1. படத்தில் காணப்படுபவரே **இயேசுநாதர்** என்னும் பெரியார். அவர் அரேபியா நாட்டின் மேற்குப் பகுதியைச் சேர்ந்தவர். அவர் தெய்வ பக்தியிலும் வாணிகத்துறையிலும் சிறந்திருந்த யூதர் என்ற ஒரு வகுப்பினர். அவர் தாயார் **மேரி** என்பவர். தகப்பனுர் பெயர் **ஜோசப்** என்பது.

2. இயேசுநாதர் பிறந்தவுடன் வானத்தில் ஓர் அதிசய விண்மீன் தோன்றியது. மூன்று வானக்கலை நிபுணர்கள் அதைக் கண்டு, குழந்தை கிறிஸ்துவைத் தரிசனம் செய்து சென்றனர். இயேசுவைக் கண்ட சோதிடர், "இவர் யூதர்களுக்கு அரசராவார்" என்றனர். அதனுல், அப்பொழுது யூத அரசனுக இருந்தவன், இயேசுவாகிய குழந்தையைக் கொல்ல முயன்ருன்; ஆனுல் அம் முயற்சி பலிக்கவில்லை.

3. இயேசுநாதர் வளர்பிறைபோல வளர்ந்து வந்தார்; கல்வியிலும் கடவுட் பக்தியிலும் நாளுக்கு நாள் மேலோங்கினுர். அவர் தமது பன்னிரண்டாம் வயதில் தர்க்க அறிஞருடன் வாதம் செய்தார். பொது மக்கள் அவருடைய நுட்ப அறிவைக் கண்டு வியப்பு அடைந்தனர். இயேசுநாதர் **யோவான்** என்ற ஞானியிடம் சென்று உபதேசம் பெற்ருர். அப்பொழுது, "இவர் என்னுடைய அன்புக்குரிய மைந்தர்," என்று வானத்திலிருந்து ஒரு குரல் கேட்டது. பின்னர் இயேசுநாதர் நாற்பது நாள் உண்ணுவிரதம் இருந்தார். நாற்பது நாட்களுக்குப் பிறகு அவர் எதையும் செய்ய வல்ல தெய்விகத் தன்மை அடைந்தார்.

4. அவர் அக்கால மக்களுக்கு உபதேசம் செய்தார். " நீ உன்னைப்போலப் பிறரையும் நேசி. உனக்கு மற்றவர்கள் என்ன செய்ய வேண்டும் என்று விரும்புகிருயோ, அதையே நீயும் அவர்களுக்குச் செய். முழு

மனத்தோடும், முழு அன்போடும், முழு பலத்தோடும் கடவுளை வழிபடு," என்பது அவர் உபதேசத்தின் ஒரு பகுதியாகும். அவர் தமது தெய்விகச் சக்தியால் குருடருக்குப் பார்வை அளித்தார்; செவிடர்களுக்குக்

காது கேட்கக் செய்தார்; நொண்டிகளை நடக்கச் செய்தார்; நோயாளிகளைக் குணப்படுத்தினர்; இறந்தவரை உயிருடன் எழுப்பினர்.

5. யூத அரசன் இயேசுவின் புகழைக் கேள்விப்பட்டான்; தம்மைத் தள்ளிவிட்டு அவர் அரசரானலும் ஆகலாம் என்று அஞ்சினன். அவன் வற்புறுத்தலால் பலர் பொய்சாட்சி கூறினர். இராஜ நிந்தனை, தெய்வ நிந்தனை என்ற இரண்டு குற்றங்கள் அவர்மீது சுமத்தப்பட்டன. இயேசு நாதர் மரண தண்டனை விதிக்கப்பட்டார்.

6. அந்நாட்டின் அக்கால வழக்கப்படி இயேசு நாதர் சிலுவை என்ற மரத்தில் ஆணிகளால் அடிக்கப்பட்டார். அப்பொழுது அவர், "கடவுளே, எனக்குத் தீமை செய்யும் இவர்களை நீர் மன்னிக்க வேண்டும்," என்று கடவுளை வேண்டினர்; உயிர் துறந்தார். அவர் உடல் கல்லறையில் அடக்கம் செய்யப்பட்டது. மூன்றும் நாள் அவர் உயிரோடு எழுந்தார்; தம் சீடர்களுடன் நாற்பது நாள் இருந்தார்; தம் கொள்கைகளை உலகத்தில் பரப்பும்படி கட்டளையிட்டு மறைந்தார்.

7. இயேசு நாதர் மக்களுடைய அறியாமையைப் போக்க விரும்பினர். அவர்களுடைய நல் வாழ்க்கைக்காகப் புத்திமதிகள் கூறினர்; பொது மக்களுக்கு உபதேசம் செய்த குற்றத்தால் தம் உயிரை இழந்தார். இது செய்வதற்கு அருமையான செயல் அல்லவா? இச்செயலால் அவர் உலகப் புகழ் பெற்றார். அவரது மதம் உலகம் எங்கும் பரவியிருக்கிறது.

அரும்பதவுரை

வாணிகம் - வியாபாரம். வானம் - ஆகாயம். விண்மீன் - நட்சத்திரம். தர்க்கம் - வாதம். நேசி - விரும்பு. வற்புறுத்தல் - கட்டாயப்படுத்துதல்.

145930
78
O-,6(4)

கேள்விகள்

1. இயேசுநாதர் எந்நாட்டைச் சேர்ந்தவர் ?
2. அவர் பெற்ஞேரின் பெயரென்ன ?
3. யூத அரசன் இயேசுவைக் கொல்ல ஏன் முயன்ருன் ?
4. இயேசுநாதர் எவ்வாறு தெய்விகத் தன்மை அடைந்தார் ?
5. இயேசுவின் உபதேசத்தின் ஒரு பகுதி யாது ?
6. அவர் தமது தெய்விகச் சத்தியால் என்னென்ன செய்தார் ?
7. இயேசுவுக்கு ஏன் மரண தண்டனை விதிக்கப்பட்டது ?
8. சிலுவையில் அறையப்படும்போது இயேசு யாரை, என்ன வேண்டினர் ?
9. அவர் எப்பொழுது உயிருடன் எழுந்தார் ? எழுந்து என்ன செய்தார் ?
10. இயேசுநாதரின் செய்வதற்கருமையான செயல் எது ?

பயிற்சி

1. இயேசுநாதரைப் பற்றி உனக்கு மேலும் தெரிந்த செய்திகளைத் தொகுத்தெழுது.

2. இப்பாடத்தை நன்கு படித்து, ‘ நல்லவர்க்கு உலகில் இடமில்லை ’ என்னும் பொருள் பற்றிப் பதினைந்து வரிகள் எழுது.

3. பலிக்கவில்லை, முயற்சி, வழக்கப்படி, செம்மல், மரணம்.—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துச் சொல்.

4. (1) முருகன், இராமன், அரசன்.—இப்பெயர்கள் ஆண்களை உணர்த்துகின்றன. ஆதலால் இவை **ஆண்பால் பெயர்கள்** எனப்படும்.

(2) வள்ளி, சீதை, அரசி .—இவை பெண்களை உணர்த்தும் பெயர்கள் ; ஆதலால் இவை **பெண்பால் பெயர்கள்** எனப்படும்.

(3) பிள்ளைகள், நண்பர்கள், அவர்கள்.—இவை பலரை உணர்த்தும் பெயர்கள். ஆதலால் இவை **பலர்பால்** எனப்படும்.

5. இப்பாடத்தில் உள்ள (1) ஆண்பால் பெயர்கள், (2) பெண்பால் பெயர்கள், (3) பலர்பால் பெயர்களைச் சொல்.

18. கடிதங்கள்

(1)

இளங்கோ இல்லம்
28, வழக்கறுத்தீசுவரர் கோவில் தெரு,
காஞ்சீபுரம், 20–12–'50.

அன்புள்ள தமிழரசி,

நலம். நலம் அறிய ஆசை. என் பள்ளிக்கூடம் ஏப்ரல் திங்கள் 15-ஆம் நாள் முதல் கோடை விடுமுறைக்காக மூடப்படும். நான் காலாண்டுத் தேர்விலும் அரையாண்டுத் தேர்விலும் நல்ல மதிப்பெண்கள் பெற்றுள்ளேன்; நீயும் நன்ருய்ப் படிக்கிருய் என்று நினைக்கிறேன். நாம் இருவரும் இந்தத் தேர்வில் முதன்மையாகத் தேற வேண்டும்; தேருவிடில் நம்மவர் நகைப்பர்.

நீ கோடை விடுமுறையில் காஞ்சிக்குத் தவருமல் வா. இங்குப் பல்லவப் பெருமக்கள் கட்டிய பல கோவில்கள் உள்ளன. ஏகாம்பரநாதர் கோவிலும் கயிலாசநாதர் கோவிலும் காணத்தக்கவை. காஞ்சி-வைகுந்தப் பெருமாள் கோவிலும் பார்க்கத்தக்கது. அக்கோவில்களில் கல்வெட்டுகள் பல உள்ளன. அவற்றின் சிறப்பைப்பற்றி என் தகப்பனுர் உனக்குக் கூறுவார். இங்குப் பல அழகிய சிற்பங்கள் உள்ளன. இன்னும் இங்குப் பார்க்கத்தக்க இடங்கள் பல உண்டு. இவை எல்லாவற்றையும் நீ நேரில் பார்ப்பது நல்லது. மாமா, மாமியர்க்கு என் வணக்கத்தைச் சொல். உன் வரவை எதிர்பார்க்கிறேன். மற்றவை நேரில் பேசுவோம்.

இங்ஙனம்,
உன் அன்புள்ள,
வா. புனிதவல்லி.

முகவரி :

மா. தமிழரசி,
நான்காம் வகுப்பு மாணவி,
சி. எஸ். எம். பெண்கள் பள்ளி,
தம்புசெட்டித் தெரு,
சென்னை—1.

(2)

10, வள்ளுவர் தெரு,
சென்னை—1,
20–12–'50.

அன்புள்ள சுந்தரமூர்த்தி,

நலம். அங்கு நீங்கள் எல்லோரும் நலம் என நம்புகிறேன்.

உன் கடிதம் வந்தது. செம்பாக்கம் கிராமத்தில் நூல்நிலையம் அமைத்தது பற்றி மகிழ்கிறேன். முதலிலே மாணவர் கழகத்தை ஏற்படுத்திய நீங்கள் பின்னர் நூல் நிலையத்தை அமைத்தமை உங்கள் முன்னேற்றக் கருத்தை நன்கு தெரிவிக்கின்றது. அந் நூல் நிலையம் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளரும் என நான் நம்புகிறேன்.

நூல் நிலையம் அமைத்த நீங்கள் அதனை அனைவர்க்கும் பயன்படுமாறு செய்தல் வேண்டும். நூல் நிலையத்தில் அறிவைப் பெருக்கும் வகையில் பல நல்ல நூல்கள் இருக்க வேண்டும். பல கதைப் புத்தகங்கள், பாரதியார், கவிமணி, நாமக்கல் கவிஞர் போன்ற இக்காலப் புலவருடைய பாட்டுப் புத்தகங்கள், நமது நாட்டுச் சரித்திர நூல்கள், கைத்தொழில் பற்றிய நூல்கள், பயிர்த்தொழில் பற்றிய நூல்கள், பல நாட்டு

மாணவர்களைப் பற்றிய நூல்கள்—இவற்றையெல்லாம் வாங்கிப் பீரோக்களில் அடுக்கிவைக்க வேண்டும்; எல்லாப் பிள்ளைகளும் அவற்றைப் படிக்கும்படி தூண்ட வேண்டும். நூல் நிலையத்துக்குக் கிராம மக்கள் ஆதரவு இருக்கின்றதா? கிராம மக்கள் ஆதரவுதான் முக்கியமாக இருக்க வேண்டும். அவர்களையும் படிக்கும்படி தூண்ட வேண்டும்.

நூல் நிலையத் திறப்பு விழாவிற்கு என்னை வரும்படி எழுதியிருந்தாய். நான் உடல் நலம் கெட்டு இருப்பதால் வர இயலவில்லை. உங்கள் நூல் நிலையம் நெடுநாள் இருந்து பிறர்க்குப் பயன்படும் என நான் நம்புகிறேன். ஊக்கம் கொண்டு வேலை செய்யுங்கள். மற்றவை பிறகு எழுதுவேன்.

இங்ஙனம்,
உன் அன்புள்ள,
மா. ரா. கலைக்கோவன்.

திருவாளர்
மா. சுந்தரமூர்த்தி அவர்கள்,
நூல்நிலைய அமைச்சர்,
மேட்டுத் தெரு,
செம்பாக்கம் கிராமம்,
செங்கற்பட்டு மாவட்டம்.

அருஞ்பதவுரை

மதிப்பெண் - மார்க்கு. முகவரி - விலாசம். மாவட்டம் - ஜில்லா.

பயிற்சி

1. டிசம்பர் விடுமுறையில் உன் ஊருக்கு வரும்படி உன் நண்பனுக்கு ஒரு கடிதம் எழுது.

2. நீ கண்ட ஒரு திருவிழாவைப் பற்றி உன் தாயாருக்கு ஒரு கடிதம் எழுது.

3. புனிதவல்லி கடிதத்திற்குத் தமிழரசி பதில் எழுதுவது போல எழுது.

4. நீ உன் தேர்வில் வாங்கிய மதிப்பெண்களைக் குறித்து உன் தந்தையார்க்கு ஒரு கடிதம் வரை.

5. (1) அரசன் —ஒரு மனிதன்
அணில் —ஒரு விலங்கு
கிளி —ஒரு பறவை
} ஓர் எண்ணிக்கை உடைய பெயர்.

இவ்வாறு ஓர் எண்ணிக்கை உடைய பெயர் **ஒருமை** எனப்படும்.

(2) அரசர் —பல மனிதர்
அணில்கள்—பல விலங்குகள்
கிளிகள் —பல பறவைகள்.

இவ்வாறு பல எண்ணிக்கை உடைய பெயர்கள் **பன்மை** எனப் படும்.

6. இப்பாடத்தில் வந்துள்ள ஒருமை, பன்மைகளைச் சொல்.

7. அ+காலம்=அக்காலம்
இ+மாடு=இம்மாடு—இவ்வாறே அ+புத்தகம், இ+மேஜை, அ+கண்ணாடி, இ+பலகை.—இவற்றைச் சேர்த்துப் படி.

8. அந்த+பையன்=அந்தப் பையன்
இந்த+பை =இந்தப் பை—இவ்வாறே
அந்த + காக்கை, இந்த + பள்ளிக்கூடம், அந்த + கடை, இந்த+பலகை.—இவற்றைச் சேர்த்துப் படி.

9. கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை அமைத்துப்படி :-
(1) யானை ——. (கத்துகிறது, பிளிறுகிறது)
(2) காக்கை ——. (அலறுகிறது, கரைகிறது)
(3) சிங்கம் ——. (கத்துகிறது, கர்ச்சிக்கிறது)
(4) பூனை ——. (உறுமுகிறது, சீறுகிறது)



19. மாணவர் இல்லம்

1. நம் வேலைகளை நாமே செய்யவேண்டும் என்னும் கருத்தினைக் காந்தியடிகள் கூறியிருக்கிறார். அவ்வாறு செய்யும் பழக்கம் பள்ளிக்கூடப் பருவத்திலிருந்தே வரவேண்டும் என்பது பலர் கருத்து. ஆதலால் பள்ளிமாணவர்கள் தங்கள் வேலைகளைத் தாங்களே செய்துகொள்ளக் கற்பிக்கப்படுகிறார்கள். ஒவ்வொரு வகுப்புப் பிள்ளைகளும் தங்கள் வகுப்பு அறையைத் தூய்மையாக வைத்திருத்தல், மேசை, நாற்காலி, பெஞ்சுகள் இவற்றைத் துடைத்துவைத்தல் முதலிய வேலைகளில் பயிற்சி பெறுகிறார்கள்.

2. சில பள்ளிகளுக்குப் பக்கத்தில் மாணவர் தங்கியிருக்கும் இல்லங்கள் உண்டு. அவற்றையும் இம்மாணவர்களே கவனித்துக்கொள்ளப் பயிற்சி பெறுகிறார்கள். இவ்வாறு மாணவர் பயிற்சி பெறும் இல்லங்

களில் வாலாஜாபாத் **இந்துமத பாடசாலையைச்** சேர்ந்த **வள்ளலார் மாணவர் இல்லம்** என்பது மிகச் சிறந்தது. அந்த இல்லத்து வேலைகள் எவ்வாறு நடைபெறுகின்றன என்பதை நீங்கள் அறிந்து கொள்வது நல்லது.

3. வள்ளலார் மாணவர் இல்லத்தில் ஏறக்குறைய ஐந்நூற்று ஐம்பது மாணவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் தங்களுக்குள் நூறுபேரைத் தேர்ந்தெடுக்கிறார்கள். அந்த நூறுபேரும் தங்களுக்குள் பதின்மரை அமைச்சர்களாகத் தேர்ந்தெடுக்கிறார்கள். ஒவ்வொரு அமைச்சருக்கும் உதவியாக ஒரு செயலாளரும் தேர்ந்தெடுக்கப்படுகிறார். இப்பதின்மருக்கும் மேலாக மந்திரிசபையை நடத்தும் தலைவனாக ஒரு மாணவன் தேர்ந்தெடுக்கப்படுகிறான்.

4. இப்பத்து அமைச்சர்களின் வேலைகள் என்ன? ஓர் அமைச்சன் இல்லத்தின் சுகாதாரத்தைக் கவனித்துக்கொள்கிறான்.

அவன் தன் கீழுள்ள பத்து மாணவர்களைக் கொண்டு மாணவர் இல்லத்தைச் சுத்தமாக வைத்துக்கொள்கிறான். வேறோர் அமைச்சன் பிள்ளைகள் உடல் நலத்தைக் கவனித்துக்கொள்கிறான். ஒரு மாணவனுக்கு நோய் வந்தாலும் இந்த அமைச்சனும் இவனைச் சேர்ந்தவர்களும் அவனைக் கவனிக்கிறார்கள்; மருத்துவரை அழைத்துவந்து வேண்டும் உதவிகளைச் செய்கிறார்கள். படத்தைப் பாருங்கள். பிள்ளைகளிடம் இருக்கும் பணத்தை வாங்கி வைத்துக்

கொண்டு அவசியமான செலவுகளுக்குமட்டும் கொடுப் பதற்கு ஓர் அமைச்சன் இருக்கின்ருன்.

5. இல்லத்தில் மாணவர்களின் படிப்பைக் கவனிக்கக் கல்வி மந்திரி ஒருவன் இருக்கிருன். குறித்த நேரத்தில் எல்லோரும் படிக்கிருர்களா என்று பார்ப்பதும் நூலகத்தையும் படிப்பகத்தையும் பயன் படுத்துகிருர்களா என்று பார்ப்பதும் அவன் வேலை. பிள்ளைகள் செய்யும் உடற்பயிற்சி விளையாட்டுகளைக் கவனிப்பது ஓர் அமைச்சன் வேலையாகும். இல்லத்து மாணவர் கழகத்தை ஓர் அமைச்சன் நடத்திவருகிருன். பெற்ருேரிடமிருந்து மாணவர்க்கு வரும் கடிதங்களை அவரவர்களிடம் சேர்ப்பித்தலும் மாணவர் எழுதும் கடிதங்களை வாங்கி அஞ்சல் நிலையத்தில் சேர்த்தலும் மற்ருெரு அமைச்சன் வேலைகளாகும்.

6. இல்லத்தில் நடக்கும் கொண்டாட்டங்கள், இல்லத்தைக் காணவரும் பெரியார்கள் மாணவர்களைக் கூட்டிப் பேசும் புத்திமதிகள் முதலியவற்றைக் கரும் பலகையில் எழுதுவதும், செய்தித்தாள்களுக்கு எழுதி அனுப்புவதும் விளம்பர அமைச்சன் வேலைகளாகும். இவ்வாறு பத்து அமைச்சர்களும் அவர்களைச் சேர்ந்த வர்களும் தங்களுக்கென்று விடப்பட்ட வேலைகளைக் கண்ணும் கருத்துமாய்க் கவனித்துவருகிருர்கள். பத்து அமைச்சரும் அடிக்கடி தங்கள் வேலைகளை முதலமைச்சனிடம் அவை கூட்டித் தெரிவிப்பார்கள்; இல்லத்தில் ஒவ்வொரு துறையிலும் மேலும் என்ன சீர்திருத்தங்கள் செய்யலாம் என்பதுபற்றி யோசிப்பார் கள். அமைச்சர்கள் தமக்குள் கூடிப்பேசுவதைப் படத்தில் பாருங்கள். இல்லத்தில் சமையல் சம்பந்த மானவற்றைக் கவனித்தலும், மாணவர்க்கு உணவு

படைத்தலைக் கவனித்தலும் உணவு அமைச்சன் வேலைகள் ஆகும்.

7. வள்ளலார் மாணவர் இல்லத்தைப்போல வேறு பள்ளிகளில் உள்ள இல்லங்களும் மாணவர்களால் நன்கு கவனிக்கப்படுமாயின், மாணவர்கள் காலத்தின் அருமை, நா நயம், பிறர்க்குத் தொண்டு புரிதல், ஒற்றுமை முதலியவற்றில் சிறந்து விளங்குவார்கள்.

அரும்பதவுரை

கருத்து - எண்ணம். தூய்மை - சுத்தம். அஞ்சல் - தபால். நாநயம் - நயம்படப் பேசுதல். வள்ளலார் - இராமலிங்கசுவாமிகள்.

கேள்விகள்

1. காந்தியடிகள் கருத்து யாது?
2. வள்ளலார் மாணவர் இல்லம் எங்கு இருக்கிறது?
3. அந்த இல்லத்தில் இருக்கும் அமைச்சர் பதின்மர் யாவர்?
4. ஒவ்வோர் அமைச்சருக்கும் உரிய வேலைகள் எவை?
5. இந்த மாணவர் இல்லத்தைப்பற்றி நீ அறிவது யாது?

பயிற்சி

1. கீழ்வரும் தடித்த சொற்களில் பெயர்ச்சொற்கள் எவை? வினைச்சொற்கள் எவை? தனித்தனியே எடுத்தெழுது.

(1) இது நல்ல **விதை**; வயலில் நெல்லை **விதை**.
(2) நீ இப்புத்தகம் **படி**; இது ஒரு **படி**.
(3) திராட்சை **சேர்** நாலணா; நீ நல்லவருடன் **சேர்**.

2. நீ பார்த்த ஒரு மாணவர் இல்லத்தைப்பற்றிப் பத்து வரிகள் எழுது.

3. (1) வரதன் **வந்தான்**, (2) கோமளம் **பாடினாள்**.—

வந்தான், பாடினாள் என்பவை **வினைமுற்றுகள்** என்பது உனக்குத் தெரியும். இவை எந்தக் காலத்தை உணர்த்தும் வினைமுற்றுகள்? இவை முன் நடந்துவிட்ட செயல்களைக் குறிக்கின்றன. ஆதலால் இவை **இறந்தகால வினைமுற்றுகள்** எனப்படும்.

நின்றார், பேசினாள், உறங்கினது, ஓடின—இவை இறந்தகால வினைமுற்றுகள்.

4. 17-ஆம் பாடத்தில் வந்துள்ள இறந்தகால வினைமுற்றுகளை எடுத்துச் சொல்.

20. கைத்தொழில்

(பாட்டு)

1. கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள்
கவலை உனக்கில்லை ஒத்துக்கொள்.
எத்தொழில் எதுவும் தெரியாமல்
இருப்பது உனக்கே சரியாமோ ? (கை)

2. உழவும் தொழிலும் இல்லாமல்
உலகில் ஒன்றும் செல்லாது.
விழவும் கலையும் விருந்துகளும்
வேறுள இன்பமும் இருந்திடுமோ ? (கை)

3. நெசவுக் காரர்கள் நெய்யாமல்
நிலத்தவர் உடைக்கென் செய்வார்கள் ?
குசவன் செய்திடும் பாண்டமன்றோ
குடித்தனம் நடத்திட வேண்டுமென்றும் ? (கை)

4. கொல்லரும் தச்சரும் கூடாமல்
கூடமும் மாடமும் வீடாமோ ?
கல்லடி சிற்பியும் தச்சருமே
காரியம் பலவினுக் கச்சாணி. (கை)

5. வேந்தர்கள் வரிப்பணம் வாங்குவதும்
வீரர்கள் வெற்றிகள் தாங்குவதும்
மாந்தர்கள் செய்யும் எத்தொழிலும்
மண்ணிற் சிறப்பது கைத்தொழிலால். (கை)

—நாமக்கல் வெ. இராமலிங்கம் பிள்ளை

அருஞ்பதவுரை

விழவு - திருவிழா. கலை - கலைகள் ; ஓவியம், சிற்பம், இசை, நடனம், நாடகம் முதலியன.

கேள்விகள்

1. கைத்தொழிலேக் கற்றுக்கொள்ளுதலின் அவசியம் என்ன ?
2. கைத்தொழிலால் உண்டாகும் பயன்கள் யாவை ? .
3. கைத்தொழிலால் ஏற்படும் இன்பங்கள் யாவை ?

பயிற்சி

1. கைத்தொழிலின் மேன்மையைக் குறித்து ஒரு கட்டுரை வரைக.

2. நீ அறிந்த வேறு கைத்தொழில்களேப் பற்றி எழுது.

3. உன் தந்தையாரைக் கேட்டுக் கூடை முடைதல் எப்படி என்பதை அறிந்துகொள்.

4. இப்பாடலின் ஆசிரியரைப் பற்றி உனக்கென்ன தெரியும்?

5. கைத்தொழிலேப் பற்றிய பழமொழிகள் இரண்டினேச் சொல்.

6. (1) தச்சன் மரவேலே **செய்கிறுன்.**
(2) கண்ணன் சோறு **சாப்பிடுகிறுன்.**
(3) கண்ணகி கோலம் **போடுகிறுள்.**

இவற்றில் (1) செய்கிறுன், (2) சாப்பிடுகிறுன், (3) போடுகிறுன் என்பன **இப்பொழுது** தொழில் நடப்பதைத் தெரிவிக்கும் வினே முற்றுகள். ஆதலால் இவை **நிகழ்கால வினேமுற்றுகள்** எனப் படும்.

7. 19-ஆம் பாடத்தில் வந்துள்ள நிகழ்கால வினேமுற்றுகளே எடுத்துக் கூறு.

8. கீழ்வரும் வாக்கியங்களில் உள்ள சொற்களே மாற்றி யமைத்து எழுது :—

(1) மோர் கடையத் தயிராகும்.
(2) குளி நீரில் குளிர்ந்த.
(3) ஏர் கட்டி உழு மாடு.
(4) நெய் காய்ச்ச ஆகும் வெண்ணெய்.



21. நான் கண்ட நல்லிடம்

(திருக்கழுக்குன்றம்)

1. நான் நான்காம் வகுப்பு மாணவி. என் பெயர் மாதவி. நாங்கள் எங்கள் வகுப்பு ஆசிரியருடன் ஒரு நாள் **திருக்கழுக்குன்றம்** செல்ல முடிவு செய்தோம். நாங்கள் பள்ளியை விட்டு நேராக **எழும்பூர்**—புகைவண்டி நிலையத்தை அடைந்தோம். அங்கு எங்களுக்கென்று தனி வண்டி ஒதுக்கப்பட்டிருந்தது. நாங்கள் அதில் ஏறி அமர்ந்தோம்.

2. புகைவண்டியில் நாங்கள் ஏறி அமர்ந்த சிறிது நேரத்திற்குள் வண்டி புறப்பட்டது. நாங்கள் வழியில் பல நற்காட்சிகளைப் பார்த்துக்கொண்டே **செங்கற்பட்டு** நிலையத்தை அடைந்தோம். நாங்கள் வண்டியை விட்டிறங்கி, அங்குள்ள அழகிய மலையைக் காணச் சென்றோம். அம்மலைமீது வானொலியும் மலர்ச் செடிகள் பலவும் வைக்கப்பட்டிருந்தன. மலை மீதிருந்து பார்ப்பின், செங்கற்பட்டும் அதனை அடுத்

துள்ள கிராமங்களும் நன்கு தெரியும். எங்கும் மின் விளக்குகள் போடப்பட்டிருந்தன. நாங்கள் அவ் வழகிய மலைக் காட்சியைக் கண்டு மகிழ்ந்தோம்: நான் அம்மலையின் சிறப்பைக் குறித்துக்கொண்டேன். பின்னர் நாங்கள் பஸ் நிலையம் சென்றோம்.

3. அங்கு எங்களுக்காக ஒரு தனி பஸ் காத்திருந்தது. நாங்கள் நாற்பதின்மரும் அதில் ஏறிக் கொண்டோம். திருக்கழுக்குன்றம் செங்கற்பட்டிலிருந்து ஒன்பது கல் தொலைவில் உள்ளது. ஒரு மணி நேரத்திற்குள் பஸ் திருக்கழுக்குன்றத்தை அடைந்தது. நாங்கள் பஸ்ஸிலிருந்து இறங்கினோம்.

4. நாங்கள் ஒரு சத்திரத்தில் தங்கினோம். அக் கிராம மக்கள் சிலர் எங்களைச் சூழ்ந்துகொண்டனர். அவர்கள், 'சங்கு தீர்த்த நீர் நோய்களைப் போக்கும் சக்தி யுடையது. அதனால் அதில் நீராடுதல் நல்லது,' என உரைத்தனர். நாங்கள் அத்திருக்குளத்தில் நன்றாக நீராடினோம்; மீண்டும் சத்திரத்திற்கு வந்து, சிற்றுண்டி உட்கொண்டு மலை ஏறப் புறப்பட்டோம். ஆ! என்ன உயரமான மலை! அந்த மலை ஏறுவதே எங்களுக்குக் கடினமாக இருந்தது. நாங்கள் ஒவ்வோரிடத்திலும் அமர்ந்து, அமர்ந்து, மலை உச்சியை அடைந்தோம். ஆசிரியர் எங்களுக்கு மலையைச் சுற்றி யுள்ள அழகிய இயற்கைக் காட்சிகளைக் காட்டினர். நாங்கள் கண்டு மகிழ்ந்தோம். ஆசிரியர் அவ்வழகிய காட்சியைப் புகைப்படம் எடுத்துக்கொண்டார்.

5. மலை உச்சியில் சிவபெருமான் கோவில் இருக்கிறது. அக்கடவுளுக்குப் படைத்த உணவின் ஒரு பகுதி, அங்கு அவ்வேளையில் நாளும் தவறாது வரும் இரண்டு கழுகுகளுக்குத் தரப்பட்டது. அவை

தின்று சென்றவுடன் எஞ்சியது எங்களுக்குத் தரப் பட்டது. அந்தக் கழுகுகள் அங்கு வந்து செல்வதே அத்தலத்தின் சிறப்பாகும். அக்கழுகுகள் வரும் காட்சியும், வந்து உணவு கொள்ளும் காட்சியும், பின் மீண்டு செல்லும் காட்சியும் கண்டு மகிழத்தக்கவை. அதனையும் ஆசிரியர் புகைப்படம் எடுத்துக்கொண் டார். கழுகுகள் வந்துபோகும் காரணத்தினலேயே அம்மலை **திருக்கழுக்குன்றம்** எனப் பெயர் பெற்றது என்று ஆசிரியர் கூறினர்.

6. "இந்த மலையில் நோய்களைப் போக்கும் மூலிகைகள் பல உள்ளனவாம். ஆதலால் இம்மலைக் காற்று உடம்புக்கு நல்லது," என்று ஆசிரியர் கூறினர். பிறகு நாங்கள் அம்மலையைச் சுற்றி வந்தோம். ஊரில் முருகக் கடவுள் கோவில் ஒன்றும் உள்ளது. நாங்கள் அங்கும் சென்று மீண்டோம்; மறுநாட் காலை ஆறு மணிக்கு அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டோம்; ஒன்பது மணிக்கு எழும்பூர் வந்து சேர்ந்தோம். நாங்கள் வரும்பொழுது திருக்கழுக் குன்றத்தின் சிறப்பியல்புகளைப் பற்றிப் பேசி மகிழ்ந் தோம். பள்ளியில் இறை வணக்கம் நடைபெற்றது. பின்னர் ஆசிரியர்க்கு வணக்கம் செலுத்திவிட்டு, நாங்கள் ஒவ்வொருவரும் அவரவர் இல்லம் சென்றோம். இம் மாதிரி இன்பச் செலவுகள் பல செய்வதால்தான் அறிவு வளர்ச்சி அடையும் என்பது எனது நம்பிக்கை.

அருஞ்பதவுரை

வானொலி - ரேடியோ. மின் விளக்குகள் - மின்சார விளக்கு கள். கல் - மைல். நீராடல் - குளித்தல். புகைப்படம் - போட்டோ. எஞ்சியது - மிகுந்தது. மூலிகைகள் - மருந்துச்செடிகள். இறை வணக்கம் - கடவுள் வழிபாடு. இல்லம் - வீடு. இன்பச் செலவு - உல்லாசப் பிரயாணம்.

கேள்விகள்

1. திருக்கழுக்குன்றம் செல்ல முடிவு செய்தது யார்?
2. ஆசிரியர் யார்யாருக்கு என்னென்ன வேலைகள் தந்தார்?
3. செங்கற்பட்டில் அவர்கள் கண்ட காட்சிகள் யாவை?
4. திருக்கழுக்குன்றம் எங்குள்ளது? அதற்கு அப்பெயர் வரக் காரணம் என்ன?
5. மலை உச்சியிலிருக்கும் கடவுள் யார்?
6. மலையில் கண்டு மகிழத்தக்க காட்சி யாது?
7. அம்மலையின் சிறப்பு யாது?
8. அவ்வூரின் சிறப்பு என்ன?
9. புகைப்படம் யார் எடுத்தது? அது எங்கெங்கு எடுக்கப் பட்டது?
10. இத்தகைய பிரயாணங்களால் விளையும் நன்மை யாது?

பயிற்சி

1. இப்பாடத்தை நன்கு படித்து ஒவ்வொரு பாராவுக்கும் ஏற்ற **தலைப்புக்** கொடு.

2. நீ கண்ட ஏதேனும் ஒரு நல்லிடத்தைப் பற்றி ஒரு கட்டுரை எழுது.

3. இப்பாடத்தை ஆசிரியர் சொல்வது போலச் சொல்.

4. இப்பாடத்தைப் புனிதவல்லி என்னும் மாணவி சொல்வது போலச் சொல்.

5. 'இத்தகைய பிரயாணங்களால் நன்மைகள் மிகவுண்டு' என்பதை விளக்கி உன் கிராமத் தோழனுக்கு ஒரு கடிதம் எழுது.

6. (1) கண்ணகி நன்ருய்ப் **பாடுவாள்.**
(2) கந்தன் நாளை இங்கு **வருவான்.**
(3) அவர்கள் விரைவில் ஊருக்குப் **போவார்கள்.**

—இவற்றில் வந்துள்ள **(1) பாடுவாள், (2) வருவான், (3) போவார்கள்** என்பன இனி நடக்க இருக்கும் செயல்களை உணர்த்தும் வினைமுற்றுகள். ஆதலால் இவை **எதிர்கால வினை முற்றுகள்** எனப்படும்.

7. 7-ஆம் பாடத்தில் வந்துள்ள எதிர்கால வினைமுற்றுகளை எடுத்து எழுது.

22. பெரியோர் உரைநடை

கோவூர் கிழார்

கோவூர் கிழார் இளமைப் பருவத்தில் ஒரு நல்லாசிரியரை அடுத்துச் செம்மையாகக் கல்வி கற்று வந்தார்; குறித்த நேரத்தில் ஆசிரியர் இல்லத்தை அடைதல், ஆசிரியர் 'இரு' எனச் சொன்ன பிறகு இருத்தல் (உட்காருதல்), பாடம் சொல்லுங்கால் அறிவை நிலைப்படுத்திக் கேட்டல், 'போ' என்றவுடன் விடைபெற்று வீடுதிரும்புதல், அவ்வப்போது தோன்றும் ஐயங்களைப் பணிவோடு கேட்டுத் தெளிதல் என்னும் மாணவர்க்குரிய இலக்கணங்களில் வழுவின்றி நடந்தமையால், விரைவில் தமிழ்ப் புலமை எய்தினர். ஒழுக்க மேம்பாடு இன்றிப் புலமை மட்டும் இருந்து பயன் என்ன ? ஒரு பயனும் உண்டாகாது அன்றோ? நமது கோவூர் கிழார் கல்வியுடன் ஒழுக்கத்தில் சிறந்து விளங்கினர். இளமை தொட்டே அவரிடம் அன்பு, அருள், ஈகை முதலிய நற்பண்புகள் வேரூன்றி வளர்ந்துவந்தன. அவர் பிறர் துன்பப்படுதலைக் காணச் சகியார்; அதனைத் தமக்கு வந்ததாக எண்ணி, விரைந்து களைவார். இத்தகைய நற்செயலால் அவரைப் பிற புலவரும் போற்றலாயினர். அவரைச் சோணாட்டு அறிஞர், சான்றோருள் ஒருவராகக் கருதி மரியாதை செலுத்திவந்தனர்.

—திரு. கா. அப்பாத்துரை அவர்கள்

மூவேந்தரும் தமிழும்

பண்டைக் காலத்தில் தமிழ்மொழி பாண்டியர், சோழர், சேரர் என்ற தமிழ்நாட்டு மூவேந்தர்களாலும் சிறப்பாக ஆதரிக்கப்பட்டுவந்தது. பாண்டிய

அரசர்கள் பண்டைத் தமிழ்ச் சங்கங்களில் புலவர்களாக வீற்றிருந்து தமிழ் மொழியைத் தங்கள் கண் போல் பாதுகாத்துவந்தனர். செங்குட்டுவன் போன்ற சேர அரசர்கள் சீத்தலைச் சாத்தனுர் முதலான பெரும் புலவர்களை ஆதரித்துவந்தார்கள். குலோத்துங்கன் முதலான சோழ அரசர்கள் கம்பர், சேக்கிழார் முதலான சிறந்த தமிழ்ப் புலவர்களை ஆதரித்ததுடன் அவர்களைக்கொண்டு சிறந்த தமிழ் நூல்களையும் எழுதச் செய்தார்கள் என்பதும் பலரும் அறிந்த தொன்ருடம்.

—திரு. சி. பன்னிருகைப் பெருமாள் முதலியார் அவர்கள்

குடும்பக்கலை

'வருவாய்க்கு ஏற்ற செலவு' என்னும் முதற் பாடமே குடும்பக்கலையை வெற்றியடையச் செய்யும் முக்கிய கலையாகும். இதனைக் கருத்திற்கொண்டே குடும்பத்தின் தேவைகளைக் கவனித்தல் வேண்டும். மனித வாழ்க்கைக்குத் தேவைப்படும் பொருள்களை இருவகையாகப் பிரிக்கலாம். ஒன்று வாழ்க்கைக்கு இன்றியமையாது தேவைப்படுபவை. மற்ருென்று ஆடம்பரமானவை.

சத்து மிகுந்த எளிய உணவு, தூய எளிய உடை, சுகாதாரத்திற்கு ஏற்ற தேவைக்குரிய அளவு வீடு, கல்வி, மருத்துவ வசதி முதலியவை முதலினத்தில் சேரத்தக்கவை.

ஆடம்பர உணவு, தேவைக்கு மேற்பட்ட அகன்ற இடமுடைய வீடு, பட்டாடைகள், பகட்டான உடைகள், அணிகலன்கள், விலையுயர்ந்த பாத்திரங்கள், பிற சாமான்கள், அடிக்கடி படக்காட்சி பார்த்தல்,

விருந்துகள் நடத்துதல், பிரயாணங்கள் செய்தல், வேலைக்காரர்களை வைத்துக்கொள்ளுதல் முதலியவை இரண்டாம் இனத்தில் சேர்க்கத்தக்கவை.

—புலவர் து. கண்ணம்மாள் அவர்கள்

அருஞ்பதவுரை

அடுத்து - சேர்ந்து. செம்மை - ஒழுங்கு. இரு - உட்கார். ஐயம் - சந்தேகம். நிலைப்படுத்தி - பதியவைத்து. வழு - குற்றம். இன்றி - இல்லாது. தொட்டு - தொடங்கி. களைவார் - நீக்குவார். சோணாடு - சோழநாடு. கருதி - எண்ணி. பணிவு - தாழ்மை. புலமை - அறிவு. மேம்பாடு - சிறப்பு. பண்பு - குணம். போற்ற லாயினர் - பாராட்டலாயினர். வீற்றிருந்து - அமர்ந்திருந்து. ஏற்ற - தகுந்த. தேவைப்படும் - அவசியப்படும். சான்றோர் - கல்வி, அறிவு, ஒழுக்கங்களில் சிறந்த பெரியோர்.

கேள்விகள்

1. கோவூர் கிழார் ஆசிரியரிடம் எவ்வாறு கல்வி கற்றார் ?
2. கோவூர் கிழாரிடம் வளர்ந்து வந்த நற்பண்புகள் எவை ?
3. அவரை ஏன் பிற புலவர்கள் போற்றலாயினர் ?
4. பாண்டிய அரசர்கள் தமிழை எவ்வாறு பாதுகாத்து வந்தனர் ?
5. சேர அரசர்கள் எவ்வாறு தமிழை ஆதரித்தார்கள் ?
6. சோழர் தமிழுக்குச் செய்த சேவை என்ன ?
7. குடும்பக்கலையின் முதற்பாடம் எது ?
8. மனித வாழ்க்கைக்குத் தேவைப்படும் பொருள்களை இரு வகையாகப் பிரிக்கலாம்.—இருவகை எவை ?
9. முதலினத்தில் சேரத் தக்கவை எவை ?
10. இரண்டாம் இனத்தில் சேரத் தக்கவை எவை ?

பயிற்சி

1. நீ இத்தகைய பெருமக்கள் உரைநடையைப் படித்தது உண்டா? நீ படித்த ஏதேனும் ஒரு பகுதியைப் பற்றிப் பத்து வரிகள் எழுது.

2. புலமை, மேம்பாடு, சான்றோர், அடுத்து, ஐயம், களைவார்.—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துச் சொல்.

23. வீரத்தாய்

(மௌன வாசிப்பு)

1. **வீராயி** என்பவள் பாண்டியநாட்டு வீரன் ஒருவனுக்கு மகள். அவளுக்குத் தமையன்மார் இருவர். அவள் அழகுடையவள்; கல்வி கற்றவள். ஆதலால் அவளை வீரர் பலர் மணந்துகொள்ள விரும்பினர். அவள் சிறந்த வீரன் ஒருவனைத் தேர்ந்தெடுத்து மணந்துகொண்டாள். மணம் செய்துகொண்ட மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு அவர்களுக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. பெற்றோர் அக்குழந்தையைத் தாலாட்டிச் சீராட்டி வளர்த்தனர்.

2. வீராயி மகன் ஐந்து வயதுடைய சிறுவனானான். அப்பொழுது பாண்டிய நாட்டின்மேல் சேரன் படையெடுத்தான். மானம் உள்ள பாண்டியன் தன் படைவீரரோடு போருக்குச் சென்றான். வீராயியின் தந்தையும் போரில் கலந்துகொண்டான். அம்முதியவன் சிறந்த போர்வீரன்; வயதில் முதியவனாயினும் போரில் இளையவனாகக் காணப்பட்டான். அவன் தன் வாளைக்கொண்டு சேர வீரர்கள் பலரைக் கொன்றான். போரில் பாண்டியனுக்கு வெற்றிகிடைத்தது. அவனது வீரத்தைப் பாராட்டிப் பாண்டியன் தனது முத்து மாலையை அவனுக்குப் பரிசளித்தான். ஆயினும், பாவம்! சேர வீரன் ஒருவன் திடீரெனத் தாக்கியதால், முதியவன் வெட்டுண்டு மாண்டான்.

3. பாண்டியன் அவன் இறந்த இடத்தில் ஒரு கல்லை நட்டு, அதில் அவன் உருவத்தைச் செதுக்கி, அதற்கு மரியாதை செய்தான். அதற்கு '**நடுகல்**' என்பது பெயர்.

4. ஆண்டுகள் சில சென்றன. வீராயியின் மகன் பத்து வயதுடைய சிறுவனுனன். அப்பொழுது சோழன் பாண்டிய நாட்டின்மீது படையெடுத்தான். 'வீட்டுக்கொரு வீரன் வேண்டும்' என்று பாண்டியன் ஆணையிட்டான். வீராயியின் அண்ணன்மார் இருவரும் போர்க்களம் சென்றனர். புலிக்குப் பிறந்தது பூனையாகுமா? முதற்போரிலே இறந்த முதிய வீரனுடைய பிள்ளைகள் ஆதலால், அவர்கள் இருவரும் தங்கள் தகப்பனைப்போலவே நன்ருகப் போரிட்டனர்; பகைவர் பலரைக் கொன்றனர். பாண்டியன் அவர்கள் போர்ச்செயலைப் பாராட்டிப் புகழ்ந்தான். ஆயினும், சோழ வீரர் அவ்விருவர்மீதும் எய்த அம்புகள் அவ்விருவரையும் இறக்கச் செய்தன. பாண்டியன் அவர்கள் இருவருக்கும் கல்எடுத்து விழாச்செய்தான்.

5. வீராயியின் மகன் பதினுறு வயதுடைய இளைஞன் ஆனுன். அவன் தன் தகப்பனுரிடம் வில் வித்தை, மற்போர், குத்துச்சண்டை, ஈட்டிப்போர் முதலியவற்றைக் கற்கத்தொடங்கினுன். அக் காலத்தில் சேரனும் சோழனும் பாண்டியனைத் தாக்கினர். பாண்டியன் தன் படையை இரண்டாகப் பிரித்தான்; ஒரு பகுதிக்கு வீராயியின் கணவனைத் தலைவனுக்கினுன். அப்படை சோழனை எதிர்க்கச் சென்றது. வீராயியின் கணவன் குதிரைமீது அமர்ந்து பகைவருடன் வாட்போர் புரிந்தான். அவன் செய்த போர் கடுமையாக இருந்தது. அவன் சோழ வீரருடன் போர் செய்கையில், சோழ மன்னன் விஷம் பூசிய அம்பு ஒன்றைத் தன் வில்லில் வைத்து, வீராயியின் கணவன் மார்பிற்குக் குறிவைத்து விட்டான். அந்தோ! அந்த விஷ அம்பு அவன் மார்பிற் பாய்ந்தது. அதனுல்,

அவன் கையில் வாளேந்தியபடியே குதிரைமீதிருந்து விழுந்தான் ; சிறிது நேரத்திற்குள் இறந்தான்.

6. வீராயி தன் கணவன் இறந்தான் என்பதைக் கேள்விப்பட்டாள் ; உடனே தன் மகனை அழைத்தாள்; அவனுக்குப் போர்உடை அணிந்தாள்; அவன் கையில் வாளைக் கொடுத்தாள்; "மகனே, நீ போர்க்களம் செல். உன் பாட்டனுர், மாமன்மார், தகப்பனுர் இவர்களைப் போல அஞ்சாமல் போர் செய். வெற்றி பெற்ருல் திரும்பி வா. இல்லாவிடில் மார்பில் காயம்பட்டு இற. போரில் முதுகு காட்டி வராதே," என்று கூறி அனுப்பினுள். சிறுவன் தன்னுல் முடிந்தவரை போர் செய்து மார்பிற் காயம்பட்டு இறந்தான்.

7. தன் மைந்தன் மடிந்தான் என்பதைக் கேட்ட வீராயி போர்க்களம் சென்ருள்; அவன் நன்ருகப் போர் செய்து, மார்பிற் காயம்பட்டு மடிந்தான் என்பதை அறிந்து மகிழ்ந்தாள்.

குழந்தாய்! இத்தகைய வீரத்தாய்மார் பிறந்த நாட்டில் நீ பிறந்திருக்கிருய் என்பதை நினைவில்வை.

அருஞ்பதவுரை

நடுகல் - சிறந்த வீரன் இறந்தபின் அவன் நினைவுச் சின்னமாக நடப்படும் கல். புரிந்தான் - செய்தான். போர்க்களம் - போர் நடக்குமிடம். இற - இறந்துபோ.

கேள்விகள்

1. வீராயி குடும்பத்தில் யார் யார் இருந்தனர்?
2. முதற் போரில் இறந்தவன் யார்? அவன் செய்த வீரச் செயல் என்ன?
3. இரண்டாம் போரில் போரிட்டவர் யார்? அவர்கள் முடிவு என்ன?
4. நடுகல் என்பது யாது?

5. யார் யாருக்கு நடுகல் வைக்கப்பட்டது? அது ஏன் வைக்கப்பட்டது?

6. மூன்றும் போரில் இறந்தவன் யார்? அவன் எப்படி இறந்தான்?

7. வீராயி தன் மகனுக்குக் கூறிய உபதேசம் யாது?

8. அவள் ஏன் போர்க்களம் சென்ருள்?

9. அவளைப்பற்றியும் அவள் குடும்பத்தாரைப்பற்றியும் நீ என்ன நினைக்கிருய்?

10. நீ எதை நினைவில் வைக்கவேண்டும்? ஏன்?

பயிற்சி

1. நடுகல், வாட்போர், படையெடுப்பு, விஷஅம்பு—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துச் சொல்.

2. இப்பாடச் செய்தியை வீராயி கூறுவதுபோலக் கூறு.

3. இதனையே அவள் மகன் சொல்வது போலச் சொல்.

4. கீழே கோடிடப்பட்ட ஒவ்வோரிடத்திலும் தக்க சொல்லை அமைத்துப் படி :—

ஆண்பால்	தீபகற்பம்
பெருக்கல்	சமாதானம்

(1) சரித்திர பாடத்தில் வருவது ——.
(2) இலக்கணப் பாடத்தில் வருவது ——.
(3) கணக்குப் பாடத்தில் வருவது ——.
(4) பூகோளப் பாடத்தில் வருவது ——.

5. (1) கண்ணன் **கலகல** என்று சிரித்தான்.
(2) மரங்கள் **மளமள** என்று முறிந்தன.
(3) மாதவி **மடமட** என்று பேசினுள்.
(4) வாள் **பளபள** என்று மின்னுகிறது.

இவ்வாறு வருவன **இரட்டைச் சொற்கள்** எனப்படும். **கலகல**—இவை இரண்டும் சேர்ந்தே ஒலிக்கும்; ஒன்றைவிட்டு மற்ருென்று பிரிந்து ஒலியாது.

வழவழ, தடதட, சடசட, கடகட, நறநற—இவை **இரட்டைச் சொற்கள்.**

24. படப் பயிற்சி

I. மேலிருக்கும் படத்தைப் பார்த்துக் கீழ்வரும் கேள்விகளுக்குப் பதில் சொல் :—

1. பையனும் பெண்ணும் ஏன் குடைகளை விரித்துப் பிடித்துக்கொண்டு செல்கிறார்கள் ?

2. அவர்களுக்குப் பின்னால் ஒருவன் ஓடுகிறான்.—ஏன் ?

3. பாதைமீது என்ன காணப்படுகிறது ?

4. நீ இப்படத்தில் என்னென்ன வகை வீடுகளைப் பார்க்கிறாய் ?

5. முதல் வீட்டில் மூவர் காணப்படுகின்றனர். அவர்கள் என்ன செய்கிறார்கள் ?

6. படத்தில் என்னென்ன மரங்கள் தெரிகின்றன ?

7. அவற்றில் ஒரு மரத்தின் உபயோகத்தைச் சொல்.

II. கீழ்வரும் ஒவ்வொரு கேள்விக்கும் படம் பார்த்துப் பதில் சொல் :—

1. இப் படத்திலுள்ள இரண்டு வகைக் கட்டடங்கள் யாவை ?

2. படத்தில் காணப்படும் பையன் தன் இடக்கையில் வைத்திருப்பது யாது ?

3. அவன் ஏன் அங்கு வந்திருக்கிறான் ?

4. படத்தில் காணப்படும் மரங்கள் எத்தனை ?

5. கிராமப் பள்ளிக்கூடத்தில் காற்று நன்றாக வீசும், வெளிச்சம் நன்றாகப் படும் என்பன எவ்வாறு பொருந்தும் ?

6. மற்றொரு கட்டடத்தின் உபயோகம் என்ன ?



25. ஆறு

(பாட்டு)

கல்லும் மலையும் குதித்துவந்தேன்—பெருங்
　　காடும் செடியும் கடந்துவந்தேன்.
எல்லை விரிந்த சமவெளி—எங்கும்நான்
　　இறங்கித் தவழ்ந்து தவழ்ந்துவந்தேன். (1)
ஏருத மேடுகள் ஏறிவந்தேன்—பல
　　ஏரி குளங்கள் நிரப்பிவந்தேன்.
ஊருத ஊற்றிலும் உட்புகுந்தேன்—மணல்
　　ஓடைகள் பொங்கிட ஓடிவந்தேன். (2)
பஞ்சை அரைத்துநூல் நூற்றுவந்தேன்—சீனி
　　பாகமாய்ச் செய்து கொடுத்துவந்தேன்.
நெஞ்சம் உலர்ந்த நெடுநகரிற்—குழாய்
　　நீராகவும் சென்று பாய்ந்துவந்தேன். (3)
அல்லும் பகலும் அலைந்துவந்தேன்—எங்கள்
　　ஆழி இறைவனைக் காணவந்தேன்.
நில்லும் எனக்கினி நேரமில்லை—இன்னும்
　　நீண்ட வழிபோக வேண்டுமம்மா. (4)

—கவிமணி–தேசிக விநாயகம் பிள்ளை

அருஞ்பதவுரை

கடந்து - தாண்டி. சீனி - சர்க்கரை. அல் - இரவு. ஆழி - கடல். இறைவன் - கடவுள். நீண்ட வழி - நெடுந்தூரம்.

கேள்விகள்

1. ஆறு தவழ்ந்து தவழ்ந்து வந்த இடங்கள் எவை ?
2. எவைகளை நிரப்பி ஆறு வந்தது ?
3. ஆறு குழாய் நீராக எங்குப் பயன்பட்டது ?
4. ஆறு யாரைக் காணச் செல்லுகிறது ?
5. 'நில்லும் எனக்கினி நேரமில்லை'—என்று ஆறு கூறுவதேன் ?

•

பயிற்சி •

1. 'ஆற்றின் பயன்' என்பது பற்றி ஒரு கட்டுரை எழுது.
2. கீழ்வரும் சொற்களை உன் சொந்த வாக்கியத்தில் அமைத்துச் சொல் :—சமவெளி, பொங்கிட, தவழ்ந்து தவழ்ந்து, ஆழி, இறைவன்.
3. ஆழி இறைவனைக் காணச் சென்ற ஆறு, இடைவழியை எவ்வாறு கடந்தது என்பதை விளக்கமாய் எழுது.
4. இப் பாட்டில் அமைந்துள்ள கருத்தை உன் சொந்த நடையில் எழுது.
5. (1) பாம்பு பாம்பு, தேள் தேள், வாடா வாடா,
   (2) பாம்பு பாம்பு பாம்பு, தேள் தேள் தேள், — — —

என்று இப்படி ஒரு சொல் பலமுறை அடுக்கி வருதல் அடுக்குத் தொடர் எனப்படும்.

வாருங்கள்	வாருங்கள்	—அடுக்குத் தொடர்கள்.
இருங்கள்	இருங்கள்	
உண்ணுங்கள்	உண்ணுங்கள்	

6. நீ அறிந்த அடுக்குத் தொடர்கள் ஆறினைக் கூறு.

26. பொதுநலத் தொண்டர்
(மௌன வாசிப்பு)

1. நமது நாட்டில் பணக்காரர் மிகச் சிலர். ஆனால் ஏழைகள் கோடிக்கணக்கில் இருக்கிறார்கள். அவர்கள் படிக்க விரும்பியும் பள்ளிக்கூடச் செலவிற்குப் பணம் இல்லாமல் தவிக்கிறார்கள்; வேறு பலவகைகளிலும் துன்பப்படுகிறார்கள். 'ஏழை என்றால் மோழையும் பாயும்' என்பது பழமொழி. 'பணம் இல்லாதவன் பிணம்' என்பது பெரியோர் அநுபவத்தில் கண்ட உண்மை.

2. எந்த நாட்டிலும் பணக்காரர்களே குடி மக்களாக இல்லை. அது போலவே ஏழைகளையே குடிமக்களாகக் கொண்ட நாடும் இல்லை. ஒவ்வொரு நாட்டிலும் செல்வர் சிலரும் எளியவர் பலருமாகவே

வாழுகின்றனர். இவ்விருவரையும் கொண்டதே நாடு. இவ்விருவரால் நடப்பதே அரசாங்கம். இந்த இருவகையினரும் சேர்ந்தே எல்லா வேலைகளையும் செய்ய வேண்டுபவராக இருக்கின்றனர்.

3. இந்த உண்மையை உணர்ந்து செல்வர்கள் ஏழைகளுக்குப் பல வழிகளிலும் உதவி செய்ய வேண்டும்; இலவசப் பள்ளிக்கூடங்கள் வைக்க வேண்டும்; நூல் நிலையங்கள் அமைக்க வேண்டும்; வாசக சாலைகளைத் திறக்க வேண்டும்; பல கைத்தொழில் நிலையங்களை ஏற்படுத்தப் பொருளுதவி செய்யவேண்டும், அல்லது தாமே வைத்து நடத்த வேண்டும். பணக்காரரர் தாம் வாழ்வதோடு மேலே சொன்ன நல்ல காரியங்களைச் செய்வார்களானால், ஏழை மக்கள் அவர்களை வாழ்த்துவார்கள். அவர்கள் புகழ் என்றும் நிலைத்து நிற்கும்.

4. ஆனால் இவ்வாறு தம் கடமையை உணர்ந்து பொதுநலத் தொண்டு செய்யும் செல்வர் சிலரே நமது நாட்டில் இருக்கின்றனர். அவருள் **கோவைப் பெரியார்-திவான் பகதூர் சி. எஸ். இரத்தின சபாபதி முதலியார்** ஒருவர். இப்பெரியார் நமது தமிழ் நாட்டில் புகழ்பெற்றவர்; இந்திய நாட்டில் பெயர் பெற்றவர்.

5. நாட்டு மக்கள் அனைவரும் கல்வி கற்க வேண்டும் என்பது இவரது கருத்து. அதற்காக இவர் கோவைத் தாலுக்கா போர்டு தலைவராக இருந்த பொழுது தொடக்கநிலைப் பள்ளிகளைப் பல கிராமங்களில் ஏற்படுத்தினர்; கோவை ஜில்லா போர்டு தலைவராக இருந்தபோது கோவை ஜில்லாவில் பல நடு நிலைப் பள்ளிகளையும் உயர்நிலைப் பள்ளிகளையும்

திறந்துவைத்தார். இவர் கோவை நகரசபைத் தலைவராகப் பல ஆண்டுகள் இருந்தார். அப்பொழுது இப்பெரியார் கோவை நகரத்தில் பல பள்ளிகளை ஏற்படுத்தினர்.

6. இப்பெரியார் வெளி ஜில்லாக்களில் உள்ள பள்ளிகளுக்கும் பொருளுதவி செய்துள்ளார்; சென்னை விவேகானந்தர் கல்லூரிக்கு ஐயாயிரம் ரூபாய் உதவியுள்ளார்; செங்கற்பட்டு ஜில்லாவைச் சேர்ந்த வாலாஜாபாத்-இந்துமத பாடசாலைக்குப் பத்தாயிரம் ரூபாய் வழங்கியுள்ளார். இவ்வாறு இவரது பொருளுதவி பெற்ற பள்ளிகள் பல. இவர் இன்றளவும் ஏழை மாணவர் பலருக்கு மாதந்தோறும் பள்ளிச் சம்பளம் கொடுத்துவருகிறார்.

7. இவர் கோவை நகரசபைத் தலைவராக இருந்தபொழுது அந்நகரத்தில் குழாய்களை அமைத்துக் குடிநீர் வசதியை அளித்தார்; பொட்டலாய்க் கிடந்த பெரிய இடத்தை அழகிய நகரமாக்கத் திட்டம் இட்டார். அந்தப் பகுதியே இன்று அவர் பெயரால் இரத்தின **சபாபதிபுரம்** (ஆர். எஸ். புரம்) என வழங்கிவருகிறது. இவர் கோவை நகரில் பல பொருள் நிலையங்களை ஏற்படுத்தினர்; பால் பண்ணை ஒன்று அமைத்து, தாமே அதற்குத் தலைவராக இருந்து நடத்தி வருகிறார்.

8. இப்பெரியார் கோவை-பங்கஜா நூல் ஆலையை நடத்துகிறவர். அந்த ஆலையில் வேலை செய்யும் தொழிலாளிகளுக்கு இவர் பல நன்மைகள் செய்துள்ளார். இவர், இந்திய வர்த்தக சங்கத்தின் தலைவராக இருந்து தொண்டு செய்தார்; சென்னை மாகாணக் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவ

ராக இருந்து நெசவாளர்க்குப் பல நன்மைகளைச் செய்தார்.

9. இவ் வள்ளல் நம் தாய்மொழியான தமிழ் மீது அளவற்ற பற்றுடையவர். தமிழ் நன்ருக வளர வேண்டும் என்பது இவரது ஆவல். அதனுல் இவர் சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தின் தலைவராக இருந்து தொண்டு செய்கிருர். இவர் உண்மையான பொதுநலத் தொண்டர். இத்தகைய பொதுநலத் தொண்டர் சேவையினுல்தான் பொதுமக்களுடைய குறைகள் நீங்க வழியுண்டு. பொதுநலத் தொண்டரான கோவைப் பெரியார் வாழ்க !

அரும்பதவுரை

மோழை - கொம்பில்லாத மாடு. நிலைத்து - அழியாமல். புகழ்- சிறப்பு. கோவை - கோயம்புத்தூர். தொடக்க நிலை - ஆரம்பநிலை. கருத்து - எண்ணம். பொருள் நிலையம் - பண்டாபீஸ். வள்ளல்- கொடையாளி.

கேள்விகள்

1. பணத்தைப் பற்றிய பழமொழிகள் எவை ?
2. அரசாங்கம் என்பது எது ?
3. எந்த உண்மையை உணர்ந்து செல்வர்கள் ஏழைகளுக்கு உதவி செய்ய வேண்டும் ?
4. செல்வர்கள் ஏழைகளுக்கு எவ்விதங்களில் உதவ வேண்டும் ?
5. பொதுநலத் தொண்டர் யார் ?
6. கோவைப் பெரியார் எவ்வெப்போது பல பள்ளிகளைத் திறந்துவைத்தார் ?
7. முதலியாரின் பொருளுதவி பெற்ற பள்ளிகள் எவை ?
8. ஆர். எஸ். புரம் என்பது யாது ?
9. கோவைப் பெரியாரின் அருந்தொண்டுகள் யாவை ?

பயிற்சி

1. எதிர்ச் சொல் கூறு :— சில, வள்ளல், உண்மை.

2. கோவைப் பெரியாரைப் பற்றி ஒரு கட்டுரை எழுது.

3. நீ அறிந்த யாரேனும் ஒரு பொதுநலத் தொண்டரைப் பற்றிச் சில வரிகள் எழுது.

4. பொதுநலத் தொண்டர், நகரசபை, பொருள் நிலையம், நூல் ஆலை, மோழை—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துச் சொல்.

5. கடன் உள்ளவன் கடனாளி.—இதை நினைவில் வைத்து, கீழ்வரும் கோடிட்ட இடங்களில் தக்க சொற்களை அமைத்துப்படி:—

(1) படிப்பு உள்ளவன் ———.

(2) முதல் உள்ளவன் ———.

(3) தொழில் செய்பவன் ———.

(4) உழைப்பு எடுப்பவன் ———.

(5) பாடு படுபவன் ———.

(6) கூட்டு உள்ளவன் ———.

6. இரு, போ, நட, படி, நில்.—எதிர்ச் சொல் கூறு.

7. தக்க சொற்களைச் சேர்த்துப் படி :—

(1) ஆசிரியர்	மதில்மேல்	ஏறியது.
(2) மாணவன்	குளத்தில்	நீந்துகிறது.
(3) வாத்து	பாடம்	படிக்கிறான்.
(4) பூனை	பாடம்	கற்பிக்கிறார்.

8. இப்பாடத்தில் உள்ள முக்கால வினைமுற்றுகளைக் கீழ்க் கண்டவாறு கட்டம் வரைந்து அவற்றில் எழுது.

எண்	இறந்தகாலம்	நிகழ்காலம்	எதிர்காலம்
1			
2			
3			
4			
5			
6			

27. சென்னை-உயிர்க் காட்சிச் சாலை

1. சென்னை நகராண்மைக் கழகத் தோட்டத்தில் உயிர்க் காட்சிச் சாலை இருக்கின்றது. அங்கு நமது நாட்டில் காணப்படாத விலங்குகளும் பறவைகளும் பிற உயிர்களும் வைக்கப்பட்டு இருக்கின்றன. நமது நாட்டிலும் மக்கள் காண முடியாத காடுகளிலும் மற்ற இடங்களிலும் வாழும் உயிர்களும் அங்கு வைக்கப் பட்டுள்ளன.

2. அவை வைக்கப்பட்டிருப்பதின் நோக்கம் யாது? நாம் சிங்கத்தைப் பற்றிப் புத்தகத்தில் படிக் கிறோம்; ஆனால் நேரில் பார்த்ததில்லை. அதனை நேரில் பார்த்தபின் நாம் மகிழ்ச்சியடைகிறோம்; உல கத்தில் பலவகை உயிர்கள் வாழ்கின்றன என்பதை நாம் அறிந்துகொள்கிறோம். நாம் பார்ப்பது நமது அறிவைப் பெருக்குகிறது. 'கண்ணாற் பார்ப்பதை விடச் சிறந்த படிப்பு வேறில்லை' என்பது பெரியோர் வாக்கு. இக்காரணத்தால்தான் அரசாங்கம் உயிர்க் காட்சிச் சாலையை வைத்துப் பாதுகாத்துவரு கின்றது.



3. சென்னை உயிர்க் காட்சிச் சாலையில் சிங் கம் இருக்கின்றது. சிங்கம் பழுப்பு மஞ்சள் நிறமுடையது. இதற் குள்ள பிடரி மயிர் வேறு எந்த விலங்கிற் கும் இல்லை. இது விலங்குகளில் வலிமை மிக்கது. அதனால் இதற்கு 'விலங்கு அரசன்' என்று ஒரு பெயரும் உண்டு.

இது ஆப்பிரிக்காக் கண்டத்திலிருந்து இங்கே கொண்டுவரப்பட்டது. இதன் ஒலிக்குக் கர்ச்சனை என்பது பெயர்.

4. அடுத்து இருக்கும் கொடிய விலங்கு **புலி.** விலங்குகளில் மிகக் கொடியது புலி. இது யானையையும் தாக்க வல்லது. இது நம் நாட்டு மலைகளில் மிகுதியாக உண்டு. இது ஆடுமாடுகளை அடித்துத் தின்னும். உடம்பில் கோடுகளையுடைய புலி

வேங்கை எனப்படும்; உருவத்தில் சிறுத்து உடம்பில் சதுரக் கட்டங்களையுடையது **சிறுத்தை** எனப்படும். நமது நாட்டில் சிறுத்தைகள் அதிகம்.

5. **யானை** நம் நாட்டுக் காடுகளில் இருக்கின்றது. இதன் தந்தங்கள் சீப்பு, பதுமைகள், பொத்தான், பெட்டி முதலியவை செய்ய உதவும். காடுகளில் வெட்டப்படும் மரத் துண்டங்களை எடுத்துச் செல்ல யானை பயன்படுகிறது. நமது நாட்டுக்



கோவில்களிலும் சுதேச அரசர்கள் அரண்மனைகளிலும் யானை வளர்க்கப்படுகிறது. பழைய காலத்து நால்வகைப் படைகளில் யானைப் படையும் ஒன்று. யானை இறைச்சி தின்னாது. யானை ஓசையிடுதல் '**பிளிறுதல்**' எனப்படும்.

6. ஒரு மரத்தின் அடியில் கட்டப்பட்டிருக்கும் உயரமான விலங்கு **ஒட்டகம்.** அது பாலைவனங்



களில் வாழ்வது. பாலைவன மக்கள் அதனை வாகனமாக உபயோகித்துப் பாலைவனத்தைக் கடப்பர். அது பல நாட்களுக்கு வேண்டும் உணவைத் தனது திமிலில் அடக்கிக்கொள்ளும் சக்தி வாய்ந்தது. ஒட்டகம் இறைச்சி தின்னாது. அதனைப் 'பாலைவனக் கப்பல்' எனவும் மக்கள் அழைப்பர்.

7. ஒட்டகத்தைப் போலவே பாலைவனத்தைக் கடக்க ஒரு பறவை பயன்படும். அது நெருப்பைத் தின்னும் சக்தியுடையது ; அதனால் **நெருப்புக் கோழி** என்னும் பெயர் பெற்றது. அது பறக்க முடியாத பறவை. அதன் முட்டை மிகப் பெரியது.





8. **கரடி** வெள்ளைக் கரடி, கருப்புக் கரடி என இருவகைப்படும். குளிர் மிகுந்த நாடுகளில் வெள்ளைக் கரடி வாழுகிறது. மற்ற இடங்களில் கறுப்புக் கரடியைக் காணலாம். கரடியும் கொடிய விலங்கு.

9. இவ்வாறே பல நாட்டுக் குரங்கு வகைகள், நூதனமான பறவை வகைகள் முதலியன அக்காட்சிச் சாலையில் இருக்கின்றன. நீங்கள் அவற்றைப் பார்த்து மகிழுங்கள்.

அருஞ்பதவுரை

பிடரி - கழுத்து. திமில் - முதுகின்மீது காணப்படும் உயர்ந்த மேடு.

கேள்விகள்

1. உயிர்க் காட்சிச் சாலை என்பது என்ன ?
2. அங்குப் பல உயிர்கள் வைக்கப்பட்டிருப்பதன் நோக்கம் என்ன ?
3. இப்பாடத்தில் வந்துள்ள விலங்குகளில் இறைச்சி தின்பவை எவை ? தின்னாதவை எவை ?
4. யானை எப்படிப் பயன்படுகிறது ?
5. பாலைவனப் பறவையும் விலங்கும் எவை ?
6. பாலைவனக் கப்பல் என்பது யாது ? அதற்கு அப்பெயர் அமையக் காரணம் என்ன ?
7. சிங்கத்தின் கூச்சல், யானையின் கூச்சல்—என்ன பெயர் பெறும் ?
8. நீ உயிர்க் காட்சிச் சாலையைப் பார்த்தது உண்டா ?
9. காட்சிச் சாலைகளைப் பார்ப்பதால் உண்டாகும் நன்மை என்ன ?
10. கரடிகளில் இருவகை உண்டு என்பதை விளக்கி எழுது.

பயிற்சி

1. நீ பார்த்துள்ள வேறு விலங்குகள், பறவைகளைப் பற்றிச் சொல்.
2. உயிர்க் காட்சிச் சாலையைப் பார்ப்பதன் பயனை விளக்கி உன் கிராமத் தோழனுக்கு ஒரு கடிதம் வரை.
3. கர்ச்சனை, பிளிறுகிறது, சதுரக் கட்டம், வரிக்கோடு—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துப்படி.
4. கோடிட்ட இடங்களைத் தக்க சொற்களால் நிரப்பு:—
   (1) சிங்கம் —— மஞ்சள் நிறம் ——.
   (2) ஒட்டகம் —— வனங்களில் ——.
   (3) இதனைப் —— எனவும் மக்கள் ——.
5. குதிரை, பசு—இவற்றில் ஒன்றைப் பற்றி 15 வரிகள் எழுது.

28. பத்திரிகைச் செய்திகள்

1. உலகத்துச் செய்திகளை வெளிப்படுத்தும் தாள்கள் **செய்தித் தாள்கள்** எனப்படும். அவை பலவகைப்படும். அவற்றுள் (1) நாள் செய்தித்தாள் கள், (2) வாரத்தாள்கள், (3) திங்கள் தாள்கள் என்பவை முக்கியமானவை. நமது தமிழில் வெளியாகும் நாள் தாள்கள் பல. அவற்றுள் சுதேசமித்திரன், தினமணி, தினசரி, விடுதலை, தினத்தந்தி, பாரததேவி என்பன குறிப்பிடத்தக்கவை. வாரத்தாள்களில் ஆனந்த விகடன், கல்கி என்பன சிறந்தவை. திங்கள் தாள் களுள் நமக்குத் தேவையானவை ஆனந்தபோதினி, செந்தமிழ், அமுதசுரபி, கலைமகள், செந்தமிழ்ச் செல்வி என்பன.

2. நாள்தாள்களில் நம்நாட்டு அரசாங்கச் செய்திகள், வெளிநாடுகளின் அரசாங்கச்செய்திகள், வாணிகம்பற்றிய விவரங்கள், தங்கம், பலவகை நகை கள், பஞ்சு, சவரன் முதலிய பொருள்களின் அன்றாட விலைகள், நமது மாகாணத்திற் செல்லும் புகைவண்டி களின் கால அட்டவணை, படக்காட்சிகளைப்பற்றிய விவரங்கள் முதலிய பல செய்திகள் வெளிவரும்.

3. வாரத்தாள்களில் அறிஞர் பலருடைய கட் டுரைகள், கதைகள், நகைச்சுவைபற்றிய துண்டுகள், அபூர்வமான உலகச்செய்திகள் வெளிவரும். திங்கள் தாள்களிலும் பல பொருள்களைப்பற்றிய கட்டுரைகள் வெளிவரும்; பெரியோர் பொன்மொழிகள், பழைய நூல்களிலுள்ள அருமையான செய்திகள், அவற்றை விளக்கும் படங்கள் முதலியன வெளிவரும்.

4. நாம் ஏன் செய்தித்தாள் படிக்கவேண்டும்? செய்தித்தாள்களில் பயிர்த்தொழில்பற்றிய விவரங்கள் முதல்' சிறுகதைகள்வரை பல செய்திகள் வெளிவருகின்றன. அவற்றுடன் நம்முடைய அரசாங்கச் சட்ட திட்டங்கள், நமது நாட்டின் முக்கிய நிகழ்ச்சிகள், உலகத்து நடக்கும் போர் நிகழ்ச்சிகள், கல்வியைப் பற்றிய செய்திகள், மாணவர்களைப் பற்றிய விவரங்கள் ஆகியவை வெளிவருகின்றன. நாம் செய்தித்தாள்களைப் படிப்பதால் இத்தனை விவரங்களையும் அறிந்து கொள்ளுகிறோம். இப்படி அறிவதால் நமது அறிவு வளர்ச்சி அடைகிறது. நாம் வாழ்கின்ற இந்த உலகத்துச் செய்திகளை நாள்தோறும் படித்து அறிவது நமது கடமைதானே?

5. நீங்கள் எல்லாச் செய்தித்தாள்களையும் நாள்தோறும் படியுங்கள்; கல்வித்தொடர்பான செய்திகளையும் சிறந்த சொற்பொழிவுகளையும் நீதிப் பகுதிகளையும் ஒரு தனி நோட்டுப்புத்தகத்தில் குறித்து வைத்துக் கொள்ளுங்கள்; சிலவற்றைக் கத்தரித்து நோட்டுப் புத்தகத்தில் ஒட்டிவையுங்கள். இவையெல்லாம் நீங்கள் கட்டுரை எழுதும்போதும் மாணவர் கழகக் கூட்டங்களில் பேசும்போதும் ஆதாரம் காட்டி எழுதவும் பேசவும் நன்கு பயன்படும்.

6. கமலம் என்னும் நான்காம் வகுப்பு மாணவி பத்திரிகைச்செய்திகள் சிலவற்றைத் தனது நோட்டுப் புத்தகத்தில் ஒட்டிவைத்திருக்கிறாள். அவற்றுள் இரண்டு கீழே தரப்பட்டுள்ளன. நீங்கள் அவற்றைப் படித்துப் பாருங்கள்; அவற்றைப்போல முக்கியமான செய்திகளைச் சேர்த்துவையுங்கள்.

1. மணிக்கு 1700 மைல் செல்லும் விமானம்

மணிக்கு 1700 மைல் செல்லும் புதிய விமானம் 1960-ஆம் ஆண்டிற்குள் கண்டுபிடிக்கப்பட்டு உபயோகத்திற்கு வந்துவிடும் என்று அமெரிக்க இயந்திர நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். அந்த நூதன விமானம் மெல்லிய உருவம் உள்ளதாக இருக்கும் என்றும், இந்தியாவிலிருந்து இலண்டனுக்கு நான்குமணி நேரத்தில் அவ்விமானத்தில் செல்லலாம் என்றும் அந்த அறிஞர்கள் கூறுகிருர்கள். (19–12–'50)

2. நமது நாட்டில் நோய் பரவக் காரணம்

இரட்சண்யசேனை மருத்துவர் கருத்து

" இந்தியாவில் நல்ல குடிதண்ணீர் வசதியும் சாக்கடை வசதியும் தேவையான அளவு இல்லை. போதுமான வைத்தியமுறைகளும் இல்லை. நோய் கண்டுள்ள கிராமங்களுக்குச் சென்று நோயைத் தடுக்க விரும்பினுலும், அக்கிராமங்களுக்குச் செல்ல நல்ல சாலைகள் இல்லை. இக்காரணங்களால் இந்தியாவில் நோய்கள் மிகுதியாகப் பரவுகின்றன. டைபாயிட், மலேரியா, கொக்கிப்புழு நோய்கள்தான் இந்தியாவில் அதிகமாக ஏற்படுகின்றன," என்று இந்தியாவில் முப்பது ஆண்டுகளாக இரட்சண்யசேனை மருத்துவராக வேலைசெய்துவரும் பெரியார் ஒருவர் கூறுகிருர். (19–12–'50)

அருஞ்பதவுரை

அன்ருடம் - நாள்தோறும். படக்காட்சி - சினிமா. நகைச்சுவை - விகடம். அபூர்வம் - அதிசயம். தொடர்பு - சம்பந்தம்.

கேள்விகள்

1. நம்நாட்டில் வெளியாகும் செய்தித்தாள்கள் எத்தனை வகைப்படும்?
2. தமிழில் வெளியாகும் நாள் செய்தித்தாள்கள் எவை?
3. மாதத்தாள்களில் சிறந்தவை எவை?
4. செய்தித்தாள்களில் வெளியிடப்படும் செய்திகள் எவை?
5. செய்தித்தாள்கள் யார்யாருக்குப் பயன்படும்?
6. உனக்குச் செய்தித்தாள்களால் பயனுண்டா?
7. செய்திகளை ஒட்டிவைப்பதாலோ, குறித்துவைப்பதாலோ உனக்கு என்ன பயன் உண்டாகும்?

பயிற்சி

1. உனக்குத் தெரிந்த (இங்குச் சொல்லப்படாத) வார, மாதத் தாள்களின் பெயர்களை எழுது.

2. செய்தித்தாள், கத்தரித்து, வளர்ச்சி, அன்றுடம், நாள் தோறும்—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துச் சொல்.

3. நான் பார்த்தேன் × நான் பார்க்கவில்லை.
   தங்கை தூங்குகிருள் × தங்கை தூங்கவில்லை.

இவ்வாறே கீழ்வருவனவற்றை மாற்று:—

(1) தகப்பனர் ஊருக்குச் சென்ருர் ×
(2) நான் பாடம் எழுதுகிறேன் ×
(3) பரந்தாமன் படிக்கிருன் ×
(4) பாட்டனர் நாளை வருவார் ×
(5) கண்ணகி கதை சொன்னுள் ×

4. (1) திருமண விருந்தில் ஏறக்குறைய நூற்றைம்பதுபேர் கலந்துகொண்டனர்.

(2) அப்புதியவன் என்னை ஏறஇறங்கப் பார்த்தான்.

(3) நான் இந்த வியாபாரத்தில் லாபநஷ்டம் கவனிக்க வில்லை.

(4) அவனுக்குச் சுகதுக்கமே தெரியாது.

(5) கமலம் இக்காரியத்தின் நன்மைதீமையை அறியாள்.

இவ்வாறு ஒன்றுக்கொன்று எதிரான சொற்கள் சேர்ந்துவரும். அவற்றை மனப்பாடம் செய்; அவற்றை எப்படி வாக்கியத்தில் உபயோகிப்பது என்பதைத் தெரிந்துகொள்.

29. நண்பர் இருவரும் கரடியும்

(நாடகம்)

[நக்கீரனும் கம்பனும் நண்பர்கள். அவர்களிருவரும் தங்கள் ஊரிலிருந்து பத்து மைலுக்கு அப்பாலுள்ள கிராமத்திற்குப் போகப் புறப்பட்டனர். நடுவில் ஒரு காடு இருந்தது. அவர்கள் அதைத் தாண்டித்தான் போக வேண்டும். இருவரும் அக் காட்டிற்குள் கால் வைத்தனர்.]

நக்கீரன் : கம்பா, நாம் இந்தக் காட்டைத்தான் கடக்க வேண்டும். இதைக் கடப்பதுதான் துன்ப மானது.

கம்பன் : நக்கீரா, இதைக் கடப்பதில் நமக்கு என்ன துன்பம் உண்டாகும்?

நக்கீரன் : இந்தக் காட்டில் கரடிகள் வாழ்கின்றன.

கம்பன் : நண்பா, நாம் கரடிக்கு அஞ்ச வேண்டா. அது வந்தால் நாம் மூச்சை அடக்கிக்கொண்டு பிணம் போலப் படுத்திருக்க வேண்டும். கரடி நம்மை மோந்து பார்த்துத் திரும்பிவிடும். கரடி பிணத்தைத் தின்னாது.

நக்கீரன் : அப்பா, நல்ல யோசனை சொன்னாய்; என் வயிற்றில் பால் வார்த்தாய்.

கம்பன் : இன்னொரு வழியிலும் நாம் தப்பித்துக் கொள்ளலாம். கரடிக்கு மரம் ஏறத் தெரியாது. ஆதலால் நாம் மரத்தில் ஏறிக்கொள்ளலாம்.

நக்கீரன் : கம்பா, எனக்கு மரம் ஏறத் தெரியாது.

கம்பன் : நண்பா, நீ கவலைப்படாதே. கரடி வந்தால் மூச்சைப் பிடித்துப் படுத்துவிடு; தப்பித்து விடலாம்.

[இருவரும் காட்டிற்குள் நடந்துபோகின்றனர். கரடி வரும் ஓசை கேட்கிறது.]

நக்கீரன் : நண்பா, கரடி வரும் ஓசை கேட்கிறது !

கம்பன் : நண்பனே, நான் மரத்தில் ஏறிக்கொள்வேன். நீ மூச்சை அடக்கிக்கொண்டு படுத்துக் கொள். கரடி உன்னை மோந்து பார்த்துத் திரும்பி விடும்.

நக்கீரன் : கம்பா, என்னை ஆபத்தில் கைவிட்டாய். எனக்கு மரம் ஏறத் தெரியாது !

கம்பன் : அப்பா, பேசிக்கொண்டிருக்க நேரமில்லை. கரடி நம்மை நோக்கி வருகிறது. நான் சொன்னது போலச் செய்.

[இவ்வாறு சொல்லிக்கொண்டே கம்பன் ஒரு மரத்தின்மீது ஏறிக் கொண்டான்.]

நக்கீரன் : கடவுளே, என் நண்பன் ஆபத்தில் என்னைக் கைவிட்டான். நீதான் என்னைக் காக்க வேண்டும்.

[என்று சொல்லிக் கீழே படுத்தான் ; கரடி அண்மையில் வருவதை அறிந்ததும் மூச்சை அடக்கிக்கொண்டான்.]

[கரடி படுத்துக்கிடந்த நக்கீரனை நோக்கி ஓடி வந்தது ; அவனை முகர்ந்து பார்த்தது ; மூச்சு வெளிப்படாமையால் அவனைப் பிணம் என்று எண்ணித் திரும்பிப் போனது. கரடி சென்றவுடன் கம்பன் மரத்திலிருந்து கீழே இறங்கி வந்தான் ; நக்கீரனை எழுப்பினான்.]

கம்பன் : நக்கீரா, கரடி உன் முகத்தினிடம் மோந்து பார்த்தது. அப்படிப் பார்த்தது உன்னிடம் ஏதோ இரகசியம் சொன்னது போல் இருந்தது.

நக்கீரன் : ஆம், அப்பா, அது உண்மையாகவே ஓர் இரகசியம் சொன்னது. 'ஆபத்தில் உன்னை விட்டு நீங்கும் நண்பனை நம்பாதே' என்பதே அந்த இரகசியமாகும்.

கம்பன் : நண்பா, ஆபத்திலிருந்து தப்பித்துக் கொள்ள உனக்கு யோசனை கூறியவன் நான். நான் இல்லாவிட்டால் கரடி உன்னைக் கொன்றிருக்கும்.

நக்கீரன் : நண்பனே, நான் விளையாட்டாகச் சொன்னேன்; அது குறித்து நீ கவலைப்படாதே.

[என்று சொல்லிக் கம்பனைத் தழுவிக்கொண்டான்.]

அரும்பொருள்

பிணம் - உயிரற்ற உடல். ஓசை - சப்தம், ஒலி. துன்பம் - கஷ்டம். அண்மையில் - சமீபத்தில். இரகசியம் - பிறர் அறியாமல் பேசுவது.

கேள்விகள்

1. கரடி வருவதை அறிந்ததும் கம்பன் என்ன செய்தான்?
2. நக்கீரன் எவ்வாறு தப்பித்துக்கொண்டான்?
3. நக்கீரன் கம்பன் என்னும் இருவரில் பொது அறிவு உடையவர் யார்?

பயிற்சி

1. இப்பாடச் செய்தியைக் கம்பன் கூறுவது போலக் கூறு.
2. இதனையே நக்கீரன் சொல்லுவது போலச் சொல்.
3. ஆபத்து, உதவி, நண்பன், அடக்கிக்கொண்டு—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்துச் சொல்.
4. வேறுபாடு கூறு :—

   கரி—கறி, அரி—அறி, எரி—எறி, இரை—இறை, கரை—கறை.
5. இப்பாடத்தில் வந்துள்ள அறுவகைப் பெயர்ச் சொற்களைக் கூறு.
6. இப்பாடத்திலிருந்து ஆறு வாக்கியங்களை எடுத்து எழுதி, அவற்றில் உள்ள எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்களைச் சொல்.
7. இப்பாடத்தில் வந்துள்ள வினைமுற்று, வினையெச்ச, பெயரெச்சங்கள் ஆறினைக் கூறு.
8. நீயும் உன் நண்பனும் சேர்ந்து இதனை நாடகமாக நடித்துக் காட்டுக.

30. செய்யுட் பாடம்

1. மூதுரை

1. வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண் டாம் மேனி நுடங்காது—பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கை யான்பாதம்
தப்பாமற் சார்வார் தமக்கு.

2. நன்றி யொருவர்க்குச் செய்தக்கால் அந்நன்றி
என்று தருங்கொல் எனவேண்டா—நின்று
தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான்தருத லால்.

3. அட்டாலும் பால்சுவையிற் குன்றாது ; அளவளாய்
நட்டாலும் நண்பல்லார் நண்பல்லர்
கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக் களே; சங்கு
சுட்டாலும் வெண்மை தரும்.

4. அடுத்து முயன்றாலும் ஆகுநா ளன்றி
எடுத்த கருமங்க ளாகா—தொடுத்த
உருவத்தால் நீண்ட உயர்மரங்க ளெல்லாம்
பருவத்தா லன்றிப் பழா.

5. உற்ற விடத்தில் உயிர்வழங்குந் தன்மையோர்
பற்றலரைக் கண்டாற் பணிவரோ ?—கற்றூண்
பிளந்திறுவ தல்லாற் பெரும்பாரந் தாங்கின்
தளர்ந்து வளையுமோ தான்.

6. நீரளவே யாகுமாம் நீராம்பல் ; தான்கற்ற
நூலளவே யாகுமாம் நுண்ணறிவு ;—மேலைத்
தவத்தளவே யாகுமாம் தான்பெற்ற செல்வம்
குலத்தளவே யாகும் குணம்.

7. பண்டு முளைப்ப தரிசியே யானாலும்
விண்டுமி போனால் முளையாதாம் ;—கொண்டபேர்
ஆற்ற லுடையார்க்கும் ஆகா தளவின்றி
ஏற்ற கருமம் செயல்.

8. மடல்பெரிது தாழை மகிழினிது கந்தம்
உடல்சிறிய ரென்றிருக்க வேண்டா—கடல்பெரிது
மண்ணீரும் ஆகாது ; அதனருகே சிற்றூறல்
உண்ணீரும் ஆகி விடும்.

9. கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்
அவையல்ல நல்ல மரங்கள்—சபைநடுவே
நீட்டோலை வாசியா நின்றான் குறிப்பறிய
மாட்டா தவன்நன் மரம்.

10. கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி
தானும் அதுவாகப் பாவித்துத்—தானுந்தன்
பொல்லாச் சிறகைவிரித் தாடினாற் போலுமே
கல்லாதான் கற்ற கவி.

—ஔவையார்

அரும்பதவுரை

1. மாமலராள் - இலக்குமி. நுடங்காது - வாடாது. துப்பு - வலிமை. தும்பிக்கையான் - விநாயகர். சார்வார் - அடைவர்.

2. நன்றி - உபகாரம். தெங்கு - தென்னைமரம். தாளுண்ட - வேரினால் உட்கொண்ட.

3. அட்டாலும் - காய்ச்சினாலும். குன்றாது - குறையாது. நட்டாலும் - சிநேகித்தாலும்.

4. கருமங்கள் - காரியங்கள். பருவம் - பழுக்கும் காலம். பழா - பழுக்கமாட்டா.

5. உற்ற - துன்பம் நேர்ந்த. வழங்கும் - கொடுக்கும். பற்றலர் - பகைவர்.

7. பண்டு - முதலிலே. விண்டு+உமி=விண்டுமி. ஆற்றல் - வலிமை.

8. கந்தம் - மணம். மண்நீரும் - கழுவத்தக்க நீரும். சிற்றூறல்=சிறு+ஊறல். மடல் - இதழ். தாழை - தாழம் பூ. மகிழ் - மகிழம் பூ.

9. கவை - பிளவு. சவை - சபை. நீட்டு ஓலை—'படி' என்று கொடுத்த ஓலை.

10. கல்லாதான் - படியாதான். கற்ற கவி - படித்த படிப்பு.

2. நல்வழி

1. பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்துவைத்துக்
கேடுகெட்ட மானிடரே கேளுங்கள்—கூடுவிட்டிங்(கு)
ஆவிதான் போயினபின்(பு) யாரே அனுபவிப்பார்
பாவிகாள் அந்தப் பணம்.

2. ஆன முதலில் அதிகம் செலவானல்
மானம் அழிந்து மதிகெட்டுப்—போனதிசை
எல்லார்க்கும் கள்ளனய் ஏழ்பிறப்பும் தீயனய்
நல்லார்க்கும் பொல்லனும் நாடு.

3. ஆற்றங் கரையின் மரமும் அரசறிய
வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றே ;—ஏற்றம்
உழுதுண்டு வாழ்வதற்(கு) ஒப்பில்லை ; கண்டீர்
பழுதுண்டு வேருேர் பணிக்கு.

4. ஆற்றுப் பெருக்கற் றடிசுடுமந் நாளுமவ்வா(று)
ஊற்றுப் பெருக்கால் உல(கு) ஊட்டும் ;—ஏற்றவர்க்கு
நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தார் ஆனுலும்
இல்லையென மாட்டார் இசைந்து.

5. ஒருநாள் உணவை ஒழியென்ருல் ஒழியாய் ;
இருநாளைக் கேலென்ருல் ஏலாய்—ஒருநாளும்
என்னே வறியாய், இடும்பைகூர் என்வயிறே !
உன்னேடு வாழ்தல் அரிது.

6. ஒன்றை நினைக்கின், அதுவொழிந்திட் டொன்ருகும் ;
அன்றி அதுவரினும் வந்தெய்தும் ;—ஒன்றை
நினையாத முன்வந்து நிற்பினும் நிற்கும் ;
எனையாளும் ஈசன் செயல்.

7. மரம்பழுத்தால் வெளவாலை 'வா' என்று கூவி
இரந்தழைப்பார் யாவரும்இங் கில்லை ;—சுரந்தமுதம்
கற்ரு தரல்போல் கரவா தளிப்பரேல்,
உற்ருர் உலகத் தவர்.

8. இழுக்குடைய பாட்டிற் கிசைநன்று ; சால
ஒழுக்கம் உயர்குலத்தி னன்று ;—வழுக்குடைய
வீரத்தி னன்று விடாநோய் ; பழிக்கஞ்சாத்
தாரத்தி னன்று தனி.

9. ஆறிடு மேடும் மடுவும்போ லாஞ்செல்வம்
மாறிடு மேறிடு மாநிலத்தீர் !—சோறிடும் ;
தண்ணீரும் வாரும் ; தருமமே சார்பாக
உண்ணீர்மை வீறும் உயர்ந்து.

10. தேவர் குறளுந் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும்—கோவை
திருவா சகமும் திருமூலர் சொல்லும்
ஒருவா சகமென் றுணர்.

—ஒளவையார்

அரும்பதவுரை

1. கூடு - உடல். ஆவி - உயிர். மானிடரே - மக்களே.
2. கள்ளன் - திருடன். தீயவன் - கெட்டவன்.
3. பழுது - குற்றம். பணி - வேலை.
4. நல்கூர்ந்தார் - வறுமையடைந்தவர்.
5. இடும்பை - துன்பம். ஏலென்றால்-ஏற்றுக்கொள் என்றால்.
6. எய்தும் - சேரும். ஈசன் - கடவுள். செயல் - காரியம்.
7. கரவாது -மறைக்காது. இரந்து - யாசித்து.
8. இழுக்கு - குற்றம். சால - மிகவும். வழுக்கு - தவறு.
9. மடு - பள்ளம்.
10. மறை - வேதம். நான்மறை - ருக், யஜுர், சாமம், அதர்வணம். முனி - அகத்தியர். மூவர்—சேர, சோழ, பாண்டியர். திருவாசகம்—மாணிக்கவாசகர் இயற்றிய நூல். திருமூலர்—இவர் திருமந்திரம் என்னும் நூலின் ஆசிரியர்.

3. குமரேச சதகம்

சிறுமையில் பெருமை

சேற்றில் பிறந்திடும் கமலமலர் கடவுளது
திருமுடியின் மேலிருக்கும் ;
திகழ்சிப்பி உடலில் சனித்தமுத் தரசரது
தேகத்தின் மேலிருக்கும் ;
போற்றியிடு பூச்சியின் வாயினூல் பட்டென்று
பூசைக்கு நேசமாகும் ;
புகலரிய வண்டெச்சில் ஆனதேன் தேவர்கொள்
புனிதஅபி டேகமாகும் ;
சாற்றரிய புலாலொடு பிறந்தகோ ரோசனை
சவாதுபுழு கனைவர்க்குமாம் ;
சாதிஈ னத்திற் பிறக்கினும் கற்றோர்கள்
சபையின்மேல் வட்டமன்றோ ?
மாற்றிச் சுரத்தினை விபூதியால் உடல்குளிர
வைத்தமெய்ஞ் ஞானமுதலே !
மயிலேறி விளையாடு குகனே!புல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே !

—குருபாத தாசர்

அரும்பதவுரை

சனித்த - உண்டான. மேல் வட்டம் - முதல் வரிசை. விபூதியால் சுரத்தினை மாற்றியது - சம்பந்தர் விபூதியால் கூன் பாண்டியன் வெப்பு நோயை நீக்கியது. ஞானம் - அறிவு.

4. பிள்ளையை இழந்த தாய்

1. " ஐயமிடு மனைகளிலே மரணம்என்றும்
அறியாத மனையேதும் இல்லை இல்லை ;
வையகத்தில் பிறப்புளதேல் இறப்பும் உண்டு ;
மாற்றரிய விதிஇதுவென்(று) உணர்ந்து கொண்டேன்;
கையமர்ந்த மகவினையும் கானில் இட்டேன் ;
கண்விழியாப் பிணம்வைத்துக் காப்ப(து) உண்டோ ?
செய்யதிரு வடிபணிந்து போற்றி இந்தச்
செய்தியினைத் தெரிவிக்க வந்தேன் " என்றாள்.

2. மங்கைமனத் தெளிவைஎலாம் உரைத்த உண்மை
வார்த்தையினால் அறிந்தவளை நோக்கி, "அம்மா,
எங்கும்இலாப் பொருள்தேடச் சென்று நீயும்,
யான்நினைத்த பொருளினையே பெற்று வந்தாய் ;
தங்கும்இந்த உலகியற்கை மாறாது ; அம்மா,
தனயனைநீ எண்ணிமனம் தளர வேண்டா ;
அங்கம் எலாம் வாயாக அழுதிட்டாலும்
அவன்எழுந்து நின்துயரம் அகற்றல் உண்டோ ?

3. " இம்மா நிலத்துஇவ் வுண்மை யெல்லாம்
யானும் அறியச் சொல்கின்றேன் ;
அம்மா, நீயும் உன்மகனை
அடக்கம் செய்போ " என்றுரைத்தான்
வெம்மா வினையின் வேர்அ றுத்து
விளங்கும் ஞான ஒளிகண்டிங்(கு)
எம்மா தவரும் தொழுதேத்த
எழிலார் கமலத்து எழுந்தோனே.

—கவிமணி-தேசிக விநாயகம் பிள்ளை

அரும்பதவுரை

வையகம் - உலகம். கையமர்ந்த - கையில் இருந்த. மகவு - குழந்தை. கான் - காடு. செய்ய - செம்மையான, சிவந்த. தனயன் - மகன். அங்கம் - உடல். மாநிலத்து - உலகத்து. வினை - கர்மங்கள். மாதவர் - தவத்தால் உயர்ந்தவர். ஏத்த - வணங்க. எழில் - அழகு. ஆர் - பொருந்திய. கமலம் - தாமரை.

5. பிள்ளை ஒழுக்கம்

1. அன்பை வளர்க்க வேண்டும் ;—கிளியே
அறிவைப் பெருக்க வேண்டும் ;
உன்போல் பிறரை யெண்ணி—நல்ல
உதவி புரிய வேண்டும்.

2. தெய்வ நினைப்பு வேண்டும் ;—கிளியே
தேச நினைப்பு வேண்டும் ;
மெய்ம்மை யொழுக்கம் வேண்டும் ;—நெஞ்சில்
வீர உறுதி வேண்டும்.

3. அன்னைசொற் கேட்க வேண்டும் ;—தந்தை
ஆணைக் கிணங்க வேண்டும் ;
தன்னை வணக்க வேண்டும் ;—பிறர்
தம்மை மதிக்க வேண்டும்.

4. வலிமை வளர்க்க வேண்டும் ;—நீ
வாழும் மனையித் தேகம் ;
எளிய வாழ்க்கை வேண்டும் ;—உயர்
எண்ணம் ஓங்க வேண்டும்.

5. ஆசிரி யர்க்க டங்கிக்—கிளியே !
அறிவை வளர்க்க வேண்டும் ;
தேசம் வாழுந் தொழிலில்—மிக்க
திறமை ஓங்க வேண்டும்.

6. காலை மாலை தோறும்—கிளியே !
கடவுள் வணக்கம் வேண்டும் ;
வேலை தன்னில் உள்ளம்—ஊன்றி
வெற்றி ஓங்க வேண்டும்.

7. அச்ச மற்ற உண்மை—கிளியே !
ஆண்மை யுள்ள நெஞ்சம்
கொச்சை யற்ற பேச்சு—நல்ல
கொள்கை கொண்ட நட்பு.

8. இன்னல் அற்ற சாந்தம்—யார்க்கும்
இனிது செய்யும் பொறுமை
தன்ன லத்த விர்ப்புக்—கிளியே !
தரும மாகும் இவையே.

9. பிரிய மான கிளியே !—தமிழ்
பேசுஞ் செல்வக் கிளியே !
பெரிய ளுகி நாளும்—நல்ல
பேர்சி றந்து வாழ்வாய் !

—சுத்தானந்த பாரதியார்

அருஞ்பதவுரை

4. மனை - இடம். 8. இன்னல் - துன்பம். பேர் - புகழ்.

சென்னை-600 008
145930
TB
O-,6(4)
N50

AGR
389

ENGAL TAMIL VACHAKAM

BOOK IV

BY

N. NANJAPPA, B.A., B.O.L., L.T.

Board High School, Kaveripatnam, Salem Dt.

VINDHYA PUBLICATIONS

VEPERY : : MADRAS

Copyright] 1950 [*As.* 8